# சிறையிலும் உண்ணாவிரதம்!

அவசரகாலச்சட்ட விதிகளின்கீழ் கைதுசெய்யப்பட்டு அரசியல் காரணங்களுக்காக சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களும் குடியரசு நாளாகிய மே 22ம் நாளை துக்கநாளாக அனுட்டித்தனர். சிறைகளில் அடைத்தாலும், சித்திரவதை செய்தாலும் அடக்குமுறையை ஏவினாலும் தமிழனின் விடுதலை உணர்ச்சியை அழிக்கமுடியாது என்பதை நிரூபிக்கும் முறையில், மே 22ம் நாளை சிறையிருக்கும் செந்தமிழ் இளைஞர்கள் துக்கநாளாக அனுட்டித்ததுடன், உண்ணாவிரதத்திலும் பிரார்த்தனையிலும் இந்த இளைஞர்கள் ஈடுபட்டிருந்ததாக அறியப்படுகிறது.

வீரத்தமிழ் இளைஞர்களின் இந்த இன விடுதலை உணர்வை மானத்தமிழ்க்குலம் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது.


# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, வைகாசி 14உ (27—5—73) ஞாயிறு ரபி; ஆகி 23—புத்தகம் 26 இதழ் 24


# 'இனவிடுதலைக்கு ஒரே வழி சுயாட்சித் தமிழ் ஈழம்'

## தமிழர் கூட்டணியின் வரலாற்றுப் பெருமை மிக்க தீர்மானம்!

ஈழத் தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய தாயகமாகிய ஈழத்தமிழகத்தில் தமிழினத்தின் சுயாட்சியை நிலை நாட்டுவதொன்றின் மூலமே, தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் பாதுகாக்க முடியுமென்று தமிழர் கூட்டணி ஒருமனதாக முடிவு செய்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் — ஒரு திருப்பத்தை ஏற்படுத்தப்போகும் இத்தீர்மானம் தமிழர் தந்தை செல்வா தலைமையில் 17—5—73ல் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் கூட்டணி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டணி நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம், போன்ற தமிழ் மக்கள் வாழும் சகல பகுதிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும் இத்தீர்மானத்தை முழுமனதுடன் அங்கீகரித்தனர்.

திருவாளர்கள், சி. சுந்தரலிங்கம், சே. மா. செல்லத்தம்பு, வே. கயிலாயபிள்ளை, மருதப்பிள்ளை(இ.தொ.கா.) நேமிநாதன், சிறிஸ்கந்தராசா, முன்னாள் செனட்டர் மாணிக்கம், சி. பாலசிங்கம், போன்ற தமிழ் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

வரலாற்றுப் பெருமை மிக்க அத்தீர்மானம் வருமாறு:—

ஈழத்தமிழினத்தின் மிகப் பெரும்பான்மையான மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே அமைப்பான தமிழர் கூட்டணி தமிழினத்திற்குறைந்தபட்ச உரிமைகளை அரசியலமைப்பில் இடம் பெறச் செய்வதன் மூலம், நாட்டின் ஒற்றுமையைக் காக்கும் பொருட்டு, 1972ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அரசாங்கத்திற்கு விடுத்த 6 அம்சக் கோரிக்கைகளை அரசாங்கம் முழுதாகப் புறக்கணித்து உதாசீனம் செய்துவிட்ட படியாலும்;

ஜனநாயக முறைப்படி இவ்வரசியல் அமைப்பை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பதை நிலை நாட்டவும் இதற்கு மாறாக தமது அரசியலமைப்பை தமிழ் மக்களில் கணிசமான தொகையினர் ஏற்றுக் கொண்டனர் என்ற அரசாங்கத்தின் கூற்றை பரிட்சிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டும் 1972-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் திகதி தமிழர் கூட்டணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமது தேசிய பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்தமையினால் நடைபெறவேண்டிய இடைத்தேர்தலை கடந்த 7 மாதங்களுக்கு மேலாக நடத்தாது அரசாங்கம் பாராளுமன்ற ஜனநாயக முறையையே கொலை செய்து வருவதாலும்;

சென்ற ஓராண்டாக நடைமுறைப் படுத்தப்பட்டு வரும், இவ்வரசியல் அமைப்பின் கீழ் தமிழினத்தின் உரிமைகள் மேலும் பறிக்கப்பட்டு, அவர்களின்;

(1) மதசுதந்திரம் முன்னெப்போதுமில்லாத வகையில் பாதிக்கப்பட்டு, சைவ கிறிஸ்தவ குழந்தைகளுக்கு, பௌத்த மதத்தை கட்டாயமாகப் போதிக்கவும், பௌத்தர் வாழாத காங்கேசன்துறை போன்ற பகுதிகளிலும், பௌத்த ஆலயங்களை நிறுவவும் அரசாங்கம் முற்பட்டிருப்பதோடு திருக்கோணேஸ்வரம் போன்ற மிகப் புராதனப் புகழ் பெற்ற சைவத் தலங்கள் மீதும், பௌத்தர் உரிமை கொண்டாட ஆரம்பித்திருப்பதாலும்;

(2) மொழிச் சமத்துவமின்மை மேலும் உறுதிப்படுத்தப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாகங்களிலும் நீதிமன்றங்களிலும் தமிழ் இடம் பெறுவது தனிப்பட்ட ஓர் அமைச்சரின் தயவில் விடப்பட்டிருப்பதோடு, ஏனைய

(4-ம் பக்கம் பார்க்க)

## போலிஸ்காவலுடன் சிவப்பு, நீலக்கொடி

யாழ்ப்பாணத்திலொரு சில இடங்களில் குடியரசு நாளன்று சிவப்பு, நீலக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. ஆயுதம் தாங்கிய பொலிஸ் காவலுடன் இக்கொடி எட்டப்பர் சிலரால் தெருவுக்கு குறுக்கே கட்டப்பட்டிருந்தது. சட்டத்துக்கு விரோதமான இச்செயலுக்கு பொலிசார் ஆதரவாக இருந்ததுடன் சிவப்பு நீலக் கொடிகளுக்கு, அவர்கள் நீட்டிய துப்பாக்கியுடன் காவல் காத்ததாகவும் பொது மக்கள் கூறினர்.

## எம். ஜி. ஆரின் மகத்தான வெற்றி!



தமிழ் மக்கள் யாவரும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த திண்டுக்கல் இடைத்தேர்தலில் தமது கட்சியான அண்ணா தி. மு. க. வுக்கு மாபெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்ததன் மூலம் தாம் உண்மையில் மக்கள் திலகமே என்பதை எம் ஜி. ஆர். நிரூபித்துக் காட்டிவிட்டார்.

திண்டுக்கல் இடைத்தேர்தலில் அண்ணா தி. மு. க. வுக்கு கிடைத்த வெற்றி, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளுக்கு கிடைத்த வெற்றியென்று மக்கள் திலகம் எம். ஜி. ஆர். கருத்தறிவித்துள்ளார்.

இந்த இடைத் தேர்தலில், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அ. தி. மு. க. வை ஆதரித்த போதிலும் — எம். ஜி. ஆரின் தனிச்செல்வாக்கும், அவரது நேர்மையும் கண்ணியமுமே அ. தி. மு. க. வின் மாபெரும் வெற்றிக்கு காரணமாகும் என்று அரசியல்வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன் அண்ணா குடும்பத்தினரும் அ. தி. மு. க. வை ஆதரித்து நின்றதும் குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல்லில் கட்சிகளுக்குகிடைத்த வாக்கு விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| கே. மாயத்தேவர் (அ. தி. மு. க.) | 2,60,930 |
| என். எஸ். வி. சித்தன் (சிண்டிகேட்) | 1,19,032 |
| பொன். முத்துராமலிங்கம் (தி. மு. க.) | 93,496 |
| சீமைச்சாமி (இந்திரா காங்கிரஸ்) | 11,423 |

# குடியரசு நாளில் தமிழ் ஈழமெங்கும் தமிழர் சுதந்திரக்கொடி ஏற்றப்பட்டது!

## அரசாங்கவிழாக்கள் பகிஷ்கரிக்கப்பட்டன! தமிழ்ஈழம் பெற்றே தீருவதென மக்கள் உறுதி!

'ஸ்ரீலங்காவின்' குடியரசு நாளாகிய மே 22ம் திகதி தமிழ் ஈழம் முழுவதும் பூரண துக்கதினம் அனுட்டிக்கப்பட்டது. அரசாங்கமும், அரசாங்க ஆதரவாளர்களும் ஏற்பாடு செய்திருந்த (சிங்கள) குடியரசு தின விழாக்களை பொதுமக்களும் மாணவர்களும் பகிஷ்கரித்தனர்.

அதே வேளையில் தமிழினத்தின் சுதந்திரக் கொடியாகிய உதய சூரியன் கொடி ஒவ்வொரு தமிழ்த் தொகுதியிலும் வைபவரீதியில் 'வாழ்க ஈழத் தமிழகம்' எனும் தேசியகீதம் முழங்க தமிழர் கூட்டணித் தலைவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட போது பெருவாரியான தமிழ் மக்கள் ஆங்காங்கு திரண்டு நின்று 'ஈழத் தமிழ் நாடு அமைத்தே தீருவோம்' என்று உணர்ச்சிப்பெருக்குடன் சபதம் ஏற்ற காட்சி உள்ளத்தைத் தொடுவதாக அமைந்திருந்தது.

மே 22ம் நாள் சிங்களக் குடியரசு கொண்டாட்டங்களை தமிழ் தேசிய இனம் துக்கதினமாகக் கொண்டாட வேண்டுமென்று தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத்திருந்தது:

(1) இலங்கைத் தமி[illegible]கள் அவர்களுடைய [illegible] சூரியன் கொடியல்லாத வேறு எந்தக் கொடிக்கும் வணக்கம் தெரிவிக்கவோ மதிப்பளிக்கவோ கூடாது என்றும்,

(2) 22-5-73 குடியரசுத் தினத்தை தமிழ் பிரதேசம் முழுவதும் தமிழ்த் துக்கதினமாக அனுட்டிக்க வேண்டுமென்றும்,

(3) மே 22 குடியரசு தினத்தையொட்டி நடைபெறும் அரசாங்க வைபவங்கள் எதிலும் இலங்கைத் தமிழ் மக்கள் எவரும் கலந்து கொள்ளக்கூடாதென்றும்,

(4) அரசு தனது அதிகாரத்தை முறையற்ற முறையில் பயன்படுத்தி, கூட்டுறவு [illegible] மக்களை குடியரசு விழாக்களில் கலந்துகொள்ளுமாறு நிர்ப்பந்தப்படுத்துவதைக் கண்டித்தும்,

(5) இலங்கைக்குவெளியில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் அனைவரும் மே 22ம் நாளை தமிழ்த் துக்கதினமாக அனுட்டிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதென்றும்.

(6) இலங்கைத் தமிழ் மக்களின் கொடியாகிய உதய சூரியன் கொடியை தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு மத்திய இடத்தில் தமிழ் மக்கள் கூடி ஏற்றி வைக்க வேண்டுமென்றும். கூட்டணி தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அவர்களும் இவர்களும்

போதி மரத்தடியில் ஞானம் பெற்ற புனிதனும் புத்தர் பெருமானின் தீம் பாலமுதம் போன்ற உபதேசங்கள் அம் மா தவச் செல்வனின் குமுதச்செய்வாயிலிருந்தே குளிர்ப்பூந்தென்றலாக வெளி வந்து கொண்டிருந்த காலம். உபதேசங்கள் என்ற அந்தத் தேன் துளிகளைச் சுவைத்து விட்டு சப்புக்கொட்டிக் கொண்டே திரும்பிச்சென்றவர்கள் பல பேர். அந்த அமுத மழையில் முற்றாகவே நனைந்துபோனவர்களும் (பிட்சுக்களாகவே தீட்சைபெற்றுக்கொண்டவர்கள்) அநேகம் பேர்தான். சாக்கியர் குலத்தைச் சேர்ந்த உயர்குடிமக்கள் அனைவருமே பிட்சுக்களாகி விடுவார்களோ என்ற பயம் வந்துவிட்டது மன்னர் சுத்தோதனருக்கு.

அவ்வாறு உயர் குடிப் புதல்வர்கள் அனைவரும் பிட்சுகளாகிவிட்டால் நாட்டில் நல்லாட்சியை நடத்துவதற்கு யாரைத்தேடுவது? மதியமைச்சரோடு கலந்தாலோசித்து மன்னன் கட்டளை பிறப்பித்தான். 'சாக்கியர்குலத்தின் கோமைந்தர் எல்லோரும் பிட்சுக்களாகிவிட முடியாது. குடும்பத்துக்கு ஒரு புதல்வன் இருந்தே ஆகவேண்டும். துறவுபூண விரும்புவோரும் பெற்றோரின் அனுமதியைப் பெற்றால்தான் துறவுபூண முடியும்'

அரசன் குலமீட்சிக்காக ஆணையிட்டான். ஆனால் அதையே கோட்பாடாகக் கொண்டுவிட்டது சாக்கியர் குலம். அதாவது மனைக்கு ஒரு மகனை பகவான் புத்தரிடம் அனுப்பி, அவர் முன்னிலையில் துறவுபூண வைத்து அவருடைய தர்மத்துக்கு காணிக்கையாக அளித்துவிடுவது என்று, உறுதிபூண்டனர்.

அவர்கள் கொண்ட சங்கற்பத்திற்கேற்ப சாக்கியர் குலத்தின் கோமைந்தர் குடும்பத்துக்கு ஒருவர் வீதம் குலமுதல்வன் முன்னிலையில் தீட்சைபெற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறு போதி பகவனை அளவு கடந்த விருப்பத்தோடு பின்பற்றியவர்கள் பலபேர். ஆனால், அவன் மார்க்கத்தில் அக்கறையில்லாதவர்களாக, அரச போகத்தில் அழுந்தியிருக்கும் ஆர்வம் படைத்தவர்களாக, இருந்தும் கட்டாயத்தின் பேரில் தீட்சை பெற்ற அரசகுமாரர்களும் சிலபேர் இருக்கத்தான் செய்தனர். இந்தச் சிலபேரில் கபிலவஸ்துவின் சிற்றரசன் அமிர்தோதனனின் புதல்வர்களான மகாநாமனும், அனுருத்தனும் குறிப்பிடத்தக்கவர்கள்.

மூத்தவன் மகாநாமன் அவ்வமயம் நாட்டின் பரிபாலனத்தை நடத்திக்கொண்டிருந்தான். இளவல் அனுருத்தனோ என்றால் அரண்மனையின் அந்தப்புரத்திலே சுகபோகத்தில் மூழ்கியிருந்தான். இல்லையென்ற சொல்லுக்குப் பொருள் என்ன என்பதே அவனுக்குத் தெரியாது. 'இந்த' இருவரில் யார் புத்தரிடம் சென்று தீட்சைபெற்றுக்கொள்வது? அண்ணன் மகாநாமன் தம்பி அனுருத்தனை அழைத்தான்.

"தம்பி நம் இருவரில் ஒருவர் போதிபகவனிடம் சென்று பிட்சு தீட்சை பெற வேண்டும். நான் போகட்டுமா? அல்லது நீ போகிறாயா' என்று கேட்டான். அதற்கு அனுருத்தன் பின்வருமாறு பதிலளித்தான்,"

"அண்ணா! புத்தர்பெருமானிடம் தீட்சை பெற்றுக்கொண்டால் ஒரு நாளைக்கு ஒருபொழுது தான் உணவருந்த வேண்டும். அந்த ஒருவேளை உணவைக்கூட வீடு விடாகச் சென்று பிச்சைஎடுத்தே சாப்பிடவேண்டும். பசித்தால் பசிக்கிறது என்று சொல்ல முடியாது. உப்புக்கூடி விட்டது என்றோ புளிப்பு போதாது என்றோ உணவின் சுவை பற்றிய அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ள முடியாது. வெப்பத்தை விரும்பினால் தண்மைகிடைக்கும் தண்மையை விரும்பினால்வெப்பத்தை அனுபவிக்க வேண்டும். வாழ்நாள்முழுவதையும் மரங்களின் அடியிலும் சந்தடியில்லாத வெளிகளிலும் தியானத்தில் அமர்ந்தவாறு தனிமையிலேயே கழிக்கவேண்டும். அப்பப்பா! எவ்வளவு துன்பங்கள். இவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாது."

## கலைமதி-கனகராஜன்

இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் பிரசித்திபெற்ற இலக்கியமான பூஜாவழியில் முன்சொன்ன கதை காணப்படுகின்றது. இந்தக் கதையில் வரும் பிட்சுக்கள் தாங்கவேண்டிய துன்பங்களைச் சொல்லுவதிலிருந்து, இலங்கையில் பௌத்தம், அதிலும் முக்கியமாக பௌத்த சங்கம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பது நமக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது. மேலும் பௌத்த குருமார் எத்தகைய பெருவாழ்வு வாழ்ந்தவர்கள் என்பதற்கு மணிமேகலையும் நமக்கு சான்று பகருகின்றது.

அனுருத்தனின் கூற்றுப்படி புத்த பெருமானைப் பின்பற்றிய பிட்சுக்கள் பலவகையான துன்பங்களால் தமது உடலை வருத்தி தவத்தீயில் கனன்று ஒளி வீசிக்கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே உள்ள மரங்களின் கீழேதான் அவர்களுடைய வாசம். பிச்சையெடுத்தால் தான் உணவு. யாராவது விரும்பிக் கொடுக்கும் சீவர ஆடைதான் உடுப்பு.

இலங்கைப் பிட்சுகளுக்கோ எனில் அழகான அலங்காரமான மாளிகைகள். (ஆசிரமம் என்று இவற்றைப் பார்த்து எப்படிச் சொல்லுவது?) இரண்டு நேரமும் நல்ல உணவு. அதுவும் இருக்கிற இடத்திற்கே கொண்டு வந்து படைப்பார்கள். (மூன்றாவது பொழுதுக்கும் நடைபெறுகிறதோ தெரியாது.) கால், கை பிடித்துவிட, ஏவல்களை நிறைவேற்ற சிஷ்யர்கள். சுகபோகத்தின் சிகரத்திலே சஞ்சரித்திருக்கிறார்கள். அன்று துறவை மேற்கொள்ள விரும்பாதவர்கள் சாப்பிட வழியில்லையே; இருக்க இடமில்லையே என்று காரணம் காட்டினார்கள். இங்கே சாப்பிட வழியில்லாதவர்கள் அழைக்காமலேயே ஓடிப்போய் சீவர ஆடைக்குள் நுழைந்துவிடத் துடிக்கிறார்கள். வாழ்வின் நிலையாமையைப் போதிக்கவேண்டியவர்கள் வைபோக வாழ்க்கை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அரசர்குல மைந்தர்கள் துறவுவாழ்வை மேற்கொண்டால் ஆட்சியை நடத்த யாருமிருக்க மாட்டார்களே என்று சுத்தோதனர் கவலைப்பட்டார்.

இலங்கையின் பௌத்த பிட்சுகளுக்கு ஆட்சிப்பீடத்தைக் கவனித்துக்கொண்டிருப்பதுதான் அதிமுக்கியமான வேலை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தான் போதிமாதவனின் அருள் வாக்கு! சாக்கியர் குலம் மேன்மை பெறவேண்டும். பாரதம் அடங்கலும் சாக்கியரின் சர்வாதிகாரத்துக்கு உட்படவேண்டும். சாக்கியரின் தாய்மொழியை உலகினர் வாயில் வலுக்கட்டாயமாக திணிக்கவேண்டும்' என்று புத்தர் புகலவில்லை.

அந்தப் பெருந்தகை முனிவனைப் பின்பற்றுவதாகக் கூறி தம்பட்டமடித்துக் கொள்ளும் இலங்கைப்பிட்சுகளுக்கு அவர்களுடைய இனத்தைத் தவிர வேறு எந்த இனமும் இருக்கக்கூடாது. இருப்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற எண்ணம். அப்படி யாராவது இருப்பதென்றாலும் அவர்களுக்கு அடிமைகளாகத்தான் இருக்கவேண்டும். அவர்களுடைய மொழியிலேயே பேசவேண்டும். இந்தத் திமிர் நிறைந்த நினைப்புக்களுக்கு எதிர்மாறாக நடந்துகொண்டால் இருக்கவே இருக்கிறது இலங்கையின் நான்குபுறத்திலும் இந்து சமுத்திரம்! இலகுவாக தள்ளிவிடலாம் என்று துள்ளிக் குதிக்கிறார்கள்.

'உயிர்கொலை புரியக் கூடாது.' மாதவச் செல்வனின் தீதற்ற வாக்கு! உயிர்களையாவது கொல்லாமல் விடுகிறதாவது எல்லா உயிர்களுக்கும் முதலாக தமிழினத்தின் உயிரையும் பறித்துவிடவேண்டும். ஒரு தமிழனையும் எஞ்சியிருக்கவிடக் கூடாது என்பதுதான் நம் பிட்சுக்களின் போக்கு!

உண்மையாகவே பௌத்த தர்மத்தில் ஊறி நிற்கும் அறவாழி அந்தணர்கள், 'எல்லா உயிர்களையும் துன்பக்கடலில் இருந்து மீட்டுவிடவேண்டும். துன்பக்கடலில் தத்தளிக்கும் உயிர்கள் சுபீட்ச வாழ்வை அடைவதற்கு வழிகாணவேண்டும்' என்று அருள்மாரி பொழிந்தவனின் திருவடிகளைச் சரணடைந்து அவன் போதித்த தர்மத்தைப் பின்பற்றுகின்ற ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்.

நம்முடைய பிட்சுக்கள் யூ.என்.பி.க் கட்சியை ஆதரிப்பவர்களாகவும், ஸ்ரீலங்கா கட்சியில் சேர்ந்து அதன்வழி நடப்பவர்களாகவும், சமசமாஜக் கட்சியை சரணடைந்தவர்களாகவும், ஜாதிகவிமுக்திப் பெரமுனையில் பற்றுதல்கொண்டவர்களாகவும் பல கட்சியினராகக் காணப்படுகிறார்கள்.

புத்தர் பெருமானின் சரணகமலோபயத்தை நினைவில் பதித்துக்கொண்டு ஆன்ம ஈடேற்றம் அடைவது எப்படி? என்று உலக உயிர்களுக்கு கருணை வழியைப்போதிப்பதற்கே அவர்களுக்கு நேரம் பற்றாமல் போய்விட்டது. அடுத்து வரும் தேர்தலில் [illegible] காக உழைக்கவும், அதன் வெற்றியை வேண்டிப் பிரார்த்தனை புரியவும், பிரசங்களைச் செய்யவும் இவர்களுக்கு நேரம் போதவில்லை.

அனைத்துக்கும் மேலாக தம்முடைய சௌகரியங்கள் எல்லாவற்றையும் துறந்து, பிறவாயாக்கையை வேண்டி அகலிடத்தையே இடமாகவும், அட்டுண்பாரைக் கேட்டுண்பவர்களாகவும், தாமாக்கும் குடியல்லாத் தன்மையாளராகவும், தருக்கழித்துவிட்ட தவவீரர்களாகவும், தர்மவான்களை உருவாக்கும் தீரர்களாகவும், அல்லும் பகலும் தொண்டு புரிந்தார்கள் அந்த சத்திய வீரர்கள். மூப்பு, பிணி, சாக்காடு என்ற இயற்கையின் சர்வாதிகாரத்துக்கு மனித இனம் அடிமையாவதைக் கண்டு பொறுக்க முடியாமல் பொருமினார்கள்.

இன்றைய இலங்கைப் பௌத்த பிக்குகளைப் பார்த்தால் தம்முடைய சௌகரியங்களுக்கு எவரெவர் உதவுகிறார்களோ அவர்களைச் சார்ந்து மற்றவர்களை அருவையக் கண்கொண்டு பார்க்கிறார்கள். இயற்கையின் சர்வாதிகாரத்துக்குமட்டுமல்ல தம்முடைய சர்வாதிகாரத்துக்கும் மக்களை உட்படுத்தி உலகின் சௌகரியங்கள் அனைத்தையும் தாமே அனுபவிக்க வேண்டுமென்று அதற்கான நடவடிக்கைகளில் இறங்கிய நகைப்பிற்கிடமாகிறார்கள். இந்தப் பிட்சுகளைப் பார்த்துவிட்டு 'பிக்காக்கள் எல்லோரும் பௌத்த மதத்தில் தான் இருக்கிறார்களா' என்று சிங்களக் கவிஞன் ஒருவனே ஏளனம் செய்திருக்கிறான்.

போதிபகவன் என்ற பூரணை நிலவைச்சுற்றி சுடர்விட்ட தியாகத்தாரகைகளெங்கே? வஞ்சனையையும், பகைமையையும் வளர்த்து வாழ்ந்துவிடத் துடிக்கும் குதும்பியாளருக்குத்தலைமைப் பீடத்தை அளிக்கத் துணை நின்று மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்தும் இந்த நட்சத்திரக் (நடிகக்) குருமார்களெங்கே.

இவர்களையும், இவர்களுடைய நடிப்பையும் பார்த்தாலே தெரியுமே அழகிய இலங்கைத் தீவில் பௌத்தம் எவ்வளவு தூரத்துக்கு சீரழிந்து கிடக்கிறதென்று. இலங்கை அரசு பெயரளவில் தான் பௌத்தத்தைப் போற்றுகின்றது. நடைமுறையில் அல்ல. உண்மையாகவே பௌத்த மதத்தை அது பின்பற்றுமானால் இலங்கையின் சிறுபான்மை மக்கள் தரையில் விடப்பட்ட மீன்களைப் போல துடித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இலங்கை அரசாங்கம் உண்மையான பௌத்த மதக் கொள்கைகளை சிங்கள மக்கள் மத்தியிலே நடைமுறையிலும் வேரூன்றச் செய்து விடுமானால் தமிழ் மக்கள் தத்தளிக்கவேண்டிய அவசியமிருக்காது. தமிழர் கூட்டுமுன்னணி நீண்ட நிம்மதிப் பெரு மூச்சொன்றை நிதானமாகவிட்டு ஓய்வு பெறலாம். ஆனால், 'இலங்கை அரசாங்கமாவது உண்மைப் பௌத்த மதத்தை பாதுகாப்பதாவது! சுத்தக் கானல் நீர்தான்.

## சிறை செல்வோம்

— கல்முனை இராசம்மா

காலத்தின் வரவுக்காய் காத்துக் கிடந்து
காய்ந்து சருகாகிப் போனாலும்; கொண்ட
கோலத்தின் இலட்சியங்கள் கோடி கழிந்து பின்னும்
கூடுமெனும் உண்மை கண்கூடு!

பாழும் வறுமை நிதம் வாட்டி மடிந்தவர்கள்
பாரில் யுகம் யுகமாய் உண்டு; நிதம்
வாழும் மனிதகுலம் அடிமை நீங்கி என்றும்
வாழும் சுதந்திரமும் வாழும்!

சிங்கத் தமிழ் மறவர் சிறையை நிரப்புதலும்
இனத்தின் விடுதலைக்குத் தியாகம் புரிவதும்
வங்கம் கண்டது போல் வெற்றி காண்பதும்
வரலாறு ஆகும் வரலாறு!

நீதி நியாயமின்றி ஈழத்தமிழ் குலத்தை
நீசச் செயல்களினால் வதைக்கும்; இந்தப்
பாதி மதி வெறியர் கிட்லர் முடிவினையே
அடைவர் நிசம் அடைவர்!

சொந்தத் தாய் நாட்டில் சொந்தமொழி பேசி
சுதந்திரமாய் வாழ வழி இல்லை; இந்த
நொந்த நிலை மாறி இன்பத்தமிழ் வாழ
செல்வோம் சிறை செல்வோம்!

●

## தமிழன்னையைக் காட்டிக்கொடுக்காதே!

—செ. குணரத்தினம்

ஆயிரம் தெய்வங்கள் ஏனையெதிர்த்தாலும்—தமிழ்
அன்னையைத்தான் துதிப்பேன்!
பூமியில் எத்தனை பிறப்பெடுத்தாலும் —நான்
பூந்தமிழையே மதிப்பேன்!

பருவம் அழிந்து பார்வை இழந்தாலும்—நான்
பைந்தமிழை மறவேன்
உருவம் மெலிந்து நரைகள் விழுந்தாலும்—அவள்
ஒளுத்திக்குத்தான் பணிவேன்!

பற்கள் விழுந்து சொற்கள் சிதறினும்—நான்
பைந்தமிழில் பாடுவேன்!
செத்து மடிகிற காலம் வரும்வரை—நான்
செந்தமிழையே பேணுவேன்!

வையத்தில் தமிழன்னை அழுதுபுலம்பிட —நான்
வாய்வீரம் பேசமாட்டேன்!
கைகளில் விலங்கினைப் பூட்டியபோதிலும்—தமிழை
காட்டிக்கொடுக்க மாட்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடச் சுட . . .

'தமிழில் நிருவாகம், தமிழ்ப் பல்கலைக் கழகம். அரசுப் பிரமுகர்கள் பிரதமரிடம் தூது செல்வர். துரையப்பா தலைமையில் பூரவாங்க ஆலோசனை'

—செய்தி

—தன்மானம் மிக்கவர்களாக இருந்தாலல்லவா தமிழரின் உரிமைகள் பற்றிப் பேசிடுவார்கள். ஆட்சியினரின் கால்பிடித்து வாழும் அடிமைகள் 'பிச்சைக்குச்' செல்லுகிறார்கள்.

●

'நான் விஜயம் செய்த கிராமங்கள் பலவும் பின் தங்கிய நிலையில் இருப்பதைக் கண்டு நான் மிகவும் வருந்தினேன். குறிப்பாகக் கலட்டிக் கிராமத்தில் மக்கள் பல வசதிக் குறைவுகளால் அவதிப்படுகிறார்கள்'

—சமூக சேவைகள் அமைச்சர்,

—இதனைத்தான் 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம்' என்பார்கள்..

●

'எமது நடுநிலைக்கொள்கை உயிர்த்துடிப்பானது. உலகில் ஒடுக்கப்பட்ட அடிமைப்படுத்தப்பட்ட நசுக்கப்பட்ட நாடுகளின் உரிமைக்காகப்போராடுவதைக் கொள்கையாகக்கொண்டது'

—பெர்னாட் சொய்சா.

—படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோவில்.

'வித்தியாதிபதியை எம். பி. ஒருவர் தாக்கினாராம்'

—செய்தி

'—கீழ்ப்படிவுள்ள ஊழியன்' அதனைப்பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

●

'நாட்டு முன்னேற்றத்துக்கு உழைக்க முன்வருக'

—கடற்றொழில் பிரதி மந்திரி, தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு.

—உழைத்து உருக் குலைந்த மலைநாட்டுத் தமிழருக்கு அளிக்கும் பட்டமும் பரிசும் தெரியாததா?

●

'ராஜனுக்கு பயமுறுத்தல்'

—செய்தி

—அவர் ராஜனல்ல, அற்ப சொற்ப சலுகைகளுக்காகத் தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் ஆளும் வர்க்கத்தினரின் அடிமை.

●

'தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தவறோம்'

—மட்டக்களப்பில் மீன்பிடி மந்திரி

—தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தமிழ் இன ஒழிப்பின் மூலம் தீர்வுகாண உத்தேசமோ?

●

'சிங்கள, தமிழ், முஸ்லிம் என்று பாகுபாடு காட்டாமல் இந்நாட்டில் வாழும் சகல மக்களின் மேம்பாட்டுக்காக உழைப்பதே எங்கள் அரசாங்கத்தின் நோக்கம்'

—மட்டக்களப்பில் மீன்பிடி மந்திரி

—உதட்டில் தேன். உள்ளத்தில் நஞ்சு.

●

நாம் யாருக்கும் சலுகைகளை வழங்க விரும்பவில்லை. எல்லோரையும் ஒரே நிலையில் வைத்து அவரவர் உரிமைகளை அவரவருக்கு வழங்கவே விரும்புகிறோம்'

—மீன்பிடி மந்திரி;

—அ. தி. சபையில் ஆடிய ஆட்டம் என்ன? இங்கு பேசிடும் வார்த்தை என்ன?

●

'இன ஒற்றுமையும் தேசப்பற்றும் இருக்கவேண்டும்'

—அமைச்சர் ரத்னயகா.

—1956 க்குப் பின் இவ்விரண்டுக்கும் ஏற்பட்ட தட்டுப்பாடு வர வர அதிகரிக்கிறதே; என்ன செய்வது?

●

'ஒரு தொகுதி மூலம் மக்கள் கருத்தை அறிய முடியாது!'

—காங்கேசன்துறை தேர்தல் பற்றி அல்பிறட் துரையப்பா.

—தந்தை செல்வா ஒரு கொள்கையை முன் வைத்துத் தமது பதவியைத் துறந்தது போல ஆளவந்தோரின் அடிமைகளான வட்டுக்கோட்டை தியாகு அல்லது நல்லூர் 'சிமோல்' அல்லது யாழ்ப்பாணத்து 'மனச்சாட்சி தமது பதவியைத் துறந்து போட்டியிட்டுப் பார்க்கலாம். அல்லது திடீர் மைச்சர், அல்லது 'இதைச் சொன்னவர்' தந்தை செல்வாவுடன் போட்டியிட்டுப் பார்க்கலாம். அப்போது மக்களின் மனக்கருத்தை அறிய முடியும் அல்லவா? அதை விடுத்துத் துரோகப்பர்கதை அளக்கிறார்.

●

'வடக்கு கிழக்கு தமிழ்ப் பொது மக்கள் அரசை ஆதரிக்கிறார்கள். அவர்களின் அரசியல் குறைபாடுகளைத் தீர்ப்போம்'

—பிரதி வர்த்தக மந்திரி

—புதிய அரசியலமைப்பினைத் தமிழ் மக்களும் தமிழ்ப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினரும் எதிர்த்த போது அந்த எதிர்ப்பு சிறியதாகத்தெரிந்தது. இவர்களுக்கு, இப்போது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சில தமிழ்த் துரோகிகள் அரசை ஆதரிப்பது, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவாகத் தெரிகிறது, இவர்களுக்கு. மற்றவர்களுக்குப் பெரிய விடயமெல்லாம் ஆளவந்தோருக்குச் சின்ன விடயம். மற்றவர்களுக்குச் சின்னதான விடயமெல்லாம் இவர்களுக்குப்பெரிய விடயம்.

—கடுகு

# அமிர் தலைமைப்பதவி ஏற்பது கண்டு இளைய சமுதாயம் புத்துணர்ச்சி பெறுகிறது!

## நாள்தோறும் நமக்கு வரும் கடிதங்களில் சில!

[தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக தமிழர் தந்தையின் அடிச்சுவட்டில் நின்று உரமேறிய விடுதலை உணர்வுடன்செயல்பட்டுவரும் ஈழத்தமிழகத்தின் தானைத்தளபதி,நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்படவிருப்பதை அறிந்து களிக்காத தமிழுள்ளங்கள்—இளமுள்ளங்கள் இருக்கவே முடியாது. அமிர் கட்சியின் தலைமைப் பதவி யேற்பது இயக்கத்துக்கு புத்துணர்ச்சி பூட்டும் என்பது இளைய சமுதாயத்தின் நம்பிக்கை. அந்தநம்பிக்கையின் எதிரொலியாக அமிர்தலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தும் பாராட்டியும் ஏராளமான கடிதங்கள் நமக்கு தினந்தோறும் வருகின்றன. அவற்றில் இரு கடிதங்கள் இங்கு இடம் பெறுகின்றன.]

தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக அண்ணு அமிர் அவர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்ற செய்தியை அறிந்ததும்அளவில்லா மகிழ்வடைந்தேன். வடக்குக்கிழக்கென்று தமிழினத்தைக்கூறு போட சில துரோகிகள் முயன்று வரும் வேளையில் கிழக்கு மாகாணமும் சேர்ந்தே அமிர் அவர்களை ஏகமனதாக தலைவராகத் தெரிவு செய்துள்ளது என்றால், மானம் மிக்க கிழக்கு மாகாண இளைஞர்களின் தமிழ்ப் பற்றுக்கும் — இனப்பற்றுக்கும் — ஒற்றுமை உணர்ச்சிக்கும் தலைவணங்குகிறது வடக்கு மாகாணம்.

தமிழினம் இன்று இருக்கின்ற தாழ்வுற்ற நிலையை மாற்றியமைக்க— தமிழினத்தின் போராட்டததிலே புதிய எழுச்சியை ஏற்படுத்தக் கூடிய ஒரு ஒப்பற்ற தலைவனை தமிழினம்— தமிழரசுக்கட்சி தன் தலைவராக ஏற்றுள்ளதென்றால் — அதையிட்டு மகிழ்வடையாத தமிழன் எவனும் தமிழனே அல்ல!

சிங்கம் இருக்க வேண்டிய இடத்திலே — வட்டுக்கோட்டைத் தொகுதியிலே ஒரு குள்ள நரி இருக்கிற தென்றால் அது தமிழினம் பெற்ற சாபக்கேடே! இதையிட்டு இப்ப வருந்திப் பயன் இல்லையென்றாலும்—தமிழரசுக்கட்சியின் தலைவராக அமிர்தெரிவாகியதுடன் அந்த மாசு அகன்று விட்டது என்பது துல்லியமாகத் தெரிகிறது.

அண்ணன் அமிர், தற்போது மிகவும் பொறுப்புள்ள இரு பெரிய பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளார். செயலாளர் நாயகமாக கூட்டணியிலும் தலைவராக கூட்டணியின் ஒரு அங்கமான தமிழரசுக் கட்சியிலும் பெரிய பொறுப்புக்களை தாங்கி சிங்கேறு போல வீற்றிருக்கும் அண்ணனுக்கு, சுதந்திரன் மூலம் ஒருவேண்டுகோள்;

தமிழினம் இன்று என்ன செய்வதென்றே தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறது. தமிழினத்துக்கு இன்று தேவை வெறும் பேச்சும்— அறிக்கைகளும் அல்ல! சுதந்திரம் தான் தேவை. அதைப் பெறுவதற்கு தமிழினத்தை நல்ல வழிகளிலே கொண்டு சென்று ஆக்க பூர்வமான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும் என்று இளைஞனாகிய நான் வேண்டுகிறேன்.

— குப்பிழான் ப. சோமசுந்தரம்.

''கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் வரும் காத்திருப்போம்'' என ஈழத் தமிழினத்தின் ஏகத்தளபதி-அண்ணன் அமிர் அடிக்கடி முழங்குவார்! அந்தச் சிம்மகர்ஜனையைச் செயலாக்கும் நிலையினை — தங்கத் தமிழர் தந்தையின் வாரிசான சிங்கத்தமிழ் மகனுக்குக் கிடைத்துள்ளதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்—பூரிப்படைகின்றோம்! இளவல்களின் இன உணர்ச்சிக்கும் எழிற்சிக்கும் ஈடு கொடுத்து வழி நடாத்தும் தகுதி அண்ணன் அமிருக்கு அதிகம் உண்டு என்பதனை எம் இனம் நன்கு உணர்ந்துவிட்டதனாற் போலும் ஏக மனதாக அன்னாரைத் தெரிவு செய்து விட்டனர் தலைவராக! குதர்கம் பேசிடும் குள்ளநரிகள் மத்தியில் தமிழரசுக்கட்சியின் கட்டுக்கோப்பினை உணர்த்தி விட்டனர்!

அண்ணன் அமிருக்கு ஒரு வேண்டுதல்! வாழ்வா— சாவா எனப் போராடத் தலைப்பட்டுள்ள எம் இனம்— தக்கதோர் தலைமையைப் பெற்றுள்ள இவ்வேளையில் தங்கள் தலைமைக் காலத்திற்குள்ளேயேஎம் இனத்திற்குப் பொற்காலம் சமைத்து — தமிழர் தந்தையின் கீழ் நல்லாட்சியொன்றினை நிறுவிட அவாவுகிறோம். நீங்கள் கூறுவது போன்று — இதுவரை கட்டுண்டோம். பொறுத்திருந்தோம். இப்போது காலம் வந்துள்ளது உங்கள் தலைமையின் கீழ் எனவே எம் கடமையைச் செய்து உரிமையை நிலைநாட்டுவோம்.

வாழ்கதமிழ் வெல்க தமிழரசு!

—கலாநிதி தேவா.

## 'எழுத்தாளர்களைக் கௌரவிப்பது எமது நன்றிக் கடமை'

## 'ஈழமேகம்' பாராட்டு விழாவில் எழில் தமிழ் ஆளர் பேச்சு!

'எமது எழுத்தாளர்களிடமும் கவிஞர்களிடமும் காணப்படுகின்ற இலக்கிய ஆற்றல் என்பது புதியதொரு சமூகத்தையே படைக்கக் கூடியது. எதிர்கால சமுதாயம் படைக்கும் இத்தகைய எழுத்தாளர்— கவிஞர்களைக் கௌரவித்துப் பெருமைப்படுத்த வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் நன்றிக் கடமை என்பதை இச்சந்தர்ப்பதில் தெளிவாகக் கூறி வைக்க விரும்புகின்றேன்.'

—ஈழமேகம் எம். ஐ. எல். பக்கீர்தம்பி இலக்கியச் சேவைகளைப் பாராட்டிக் கௌரவிக்கு முகமாக சம்மாந்துறை எழுத்தாளர் சங்கம் அன்னவரின் 50 வயது நிறைவானதையொட்டி எடுத்த பொன் விழாவில் மட்டுநகர் முதல்வரும் சொல்லின் செல்வருமான திரு. செ. இராசதுரை அவர்கள் ஈழமேகம் அவர்களைப் பாராட்டி பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

கவிஞர் பஸீல் காரியப்பர் தலைமையில் சம்மாந்துறை மகாவித்தியாலயத்தில் நடந்த இப்பொன் விழாவில் திரு. செ. இராசதுரை அவர்கள் மேலும் பேசும் போது கூறியதாவது.

'ஈழமேகம் அவர்கள் இலங்கையில் வாழும் குறிப்பிடத்தக்க சில கவிஞர்களின் வரிசையில் இடம்பெறக்கூடியவர். புரட்சிகரமான கருத்துக்களை எடுத்துப் பாவித்து எழுதியவர். கலை-கலாச்சார சமூக ஏற்றங்களைத் தனது அடிப்படை எண்ணத்தில் வைத்துத் தனது சிந்தனையைச் செலுத்திய சிறந்தகவிஞர் ஈழமேகம். அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க முன்வந்த சம்மாந்துறை எழுத்தாளர் சங்கத்தை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.';

இதை அடுத்து கல்முனை மாவட்ட நீதிபதி ஜனாப். ஏ. எம். எம். அலாவுதீன், அதிபர் ஜே. எம். எம். அப்துல் காதர்,ஆசிரியர் ஜனாப் எஸ். ஏ. ரூசிக் ஆகியோரும் பேசினர்.

கல்முனை மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எஸ். எம். எம். அப்துல் கபூர் அவர்கள் எழுத்தாளர் சங்க சார்பாக ஈழமேகம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

பொதுச் செயலாளர் கவிஞர் மாறன் — யூ. செயின்

[4-ம் பக்கம் பார்க்க]

# பீற்றர் கெனமன் தமிழுக்கு கொழும்பில் கொள்ளி வைக்கிறார்!

## பிதற்றுகிறார் பொன்னர் அளவெட்டியில்!

'தன்னெஞ்சறிவது பொய்யற்க
பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்'

எனும் பொய்யாமொழி கூடக் கொம்யூனிஸ்டுக்களை சுடவில்லையா? தமிழுக்கு உரிமை கொடுப்போம் என்று கொக்கரிக்கும் வடபகுதிக் கொம்யூனிஸ்டுத் தலைவர் வி. பொன்னம்பலம் அவர்களே உங்கள் மாபெருந் தலைவர் அமைச்சர் திரு: பீற்றர் கெனமன் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத் திறப்பு விழா அழைப்பு இதழைப் பார்த்தீர்களா?

முன்பக்கமும் பின்பக்கமும் சிவப்பு நிறத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. முன் பக்கத்தில் மண்டபத்தின் படம் நீல நிறத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆனால் முற்பக்கத்தில் சிங்களத்தில் மட்டும் 'பகனென் பகன' என்று வெள்ளை எழுத்தில் வரையப்பட்டுள்ளது.

இதே முற்பக்கத்தில் மண்டபத்தின் படத்தின்கீழ் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டுமண்டபம் என்று எழுதப்பட்டுள்ளது? தமிழில் ஏன் எழுதப்படவில்லை? கேவலம் ஆங்கிலத்துக்குக் கொடுத்த இடத்தை-மதிப்பைத் தானும் தமிழுக்குக் கொடுக்க உங்கள் தோழர் அமைச்சருக்கு மனம் வரவில்லையா?

அவர் என்ன செய்வார்! [illegible] மொழிக்கு முன்பக்கத்தில் இடம் கொடுத்து சிங்களத்துடனும் ஆங்கிலத்துடனும் சமத்துவம் கொடுக்கவேண்டுமா -இப்படிக்கொடுத்தால் தமிழரும் சிங்களவருடன் சம உரிமை உடையவர்களாகிவிடுவார்களே!

அடுத்ததாக 'பகனென் பகன' எனும்கலாச்சார நிகழ்ச்சி என்று தமிழிலும் இந்த அழைப்பிதழில் எழுதப்பட்டுள்ளது. 'பகனென் பகன' என்றால் என்ன? இதனை விளங்கத் தமிழர் யாரிடம் செல்வது? ஏன் தமிழரை இவ்வாறு சிறுமைப்படுத்துகிறது இந்த அரசாங்கம்.

இச்சூழ் நிலையில் இந்த அழைப்பை தன்மானமுள்ள தமிழன் எவனாவது ஏற்று விழாவில் கலந்துகொள்வானா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# திண்டுக்கல் தீர்ப்பு!

இந்தியத் தமிழ் நாட்டு மக்கள் மட்டுமன்றி உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் மிகுந்த ஆவலுடன் எதிர் பார்த்திருந்த திண்டுக்கல் இடைத்தேர்தல் முடிவு இப் போது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது. எதுவித ஐயத்துக்குமிடமின்றி திண்டுக்கல் தொகுதி வாக்காளர்கள் ஒரு இலட்சத்து நாற்பத்தோராயிரம் பெரும்பான்மை வாக்குகளால் அ. தி. மு. க. வேட்பாளருக்கு வெற்றியீட் டிக்கொடுத்திருக்கிறார்கள்.

சென்ற 1971 பொதுத்தேர்தல் சமயத்தில் — தி. மு. கழகம் பிளவுபடாமலிருந்த நேரத்தில், இன்று ஆளும்கட்சி யாக இருக்கும் தி. மு. க. கைப்பற்றிய திண்டுக்கல் தொகு தியை இப்போது தி. மு. க. விலிருந்து பிரிந்து சென்ற அ.தி. மு. க. கைப்பற்றி யிருக்கிறது.

ஓர் இடைத்தேர்தலின் முடிவு தமிழகத்தின் ஆட்சியில் எதுவித மாற்றத்தையும் கொண்டுவரப்போவதில்லையெனி னும், தி. மு. க. இரண்டாக பிளவுபட்டு, மக்கள் திலகம் எம். ஜி. ஆர், கே. ஏ. மதியழகன், மனோகரன் போன்றோர் தலைமையில் அ. தி. மு. க. புதிய கட்சியாக உருவாகிய பின்னர் நடைபெற்ற இடைத்தேர்தலாக திண்டுக்கல் தேர்தல் இருந்ததாலும் அண்ணாவின் வழி செல்வதாகச் கூறும் அண்ணா தி. மு. க. வுக்கும், அண்ணாவால் ஸ்தாபிக் கப்பட்ட தி. மு. க. வுக்குமிடையே கடுமையான கருத்து வேறுபாடுகளும், மோதல்களும் இருந்ததாலும் உலகத் தமிழ் மக்களும் தமிழ் நாட்டு மக்களும் திண்டுக்கல் தேர் தல் முடிவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததில் ஆச்சரிய மில்லை.

திண்டுக்கல் இடைத்தேர்தலில் அண்ணா தி. மு. க. மிகப்பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது ஒரு விஷ யத்தை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது. பேர றிஞர் அண்ணாவின் பாசறையில் வளர்ந்த தலைவர்களி டையே எத்தனை மோதல்களும் பேதங்களும் இருந்தா லும் கூட — தி. மு. க. அது இல்லாவிட்டால் அ. தி. மு. க. —இந்த இரண்டு அண்ணாவின் அணிகளில் ஏதோ ஓர் அணியைத்தான் தமிழ் நாட்டு மக்கள் ஆதரித்து நிற்பார் கள் என்பதையும், பேரறிஞர் அண்ணாவின் வழியை விட்டு விலகி வேறு எந்த வழியிலும் தமிழக மக்கள் திசை திரும்ப மாட்டார்கள் என்பதையும் திண்டுக்கல் தேர்தல் முடிவு பிரத்தியட்சமாக நிருபித்து வட்டது கண்டு நாம் மெத்த மகிழ்ச்சியடைகிறோம்.

அண்ணா தி. மு. க.வைப் பயன்படுத்தி, —எம். ஜி. ஆரின் செல்வாக்கைப்பயன்படுத்தி தமிழ் நாட்டில் காலூன்றுவதற்கு கம்யூனிஸ்டுகள் முயற்சியெடுத்தபோதி லும், அதற்கு மக்கள் திலகம் எம். ஜி. ஆர். கிஞ்சிற்றும் இடம் கொடுக்கமாட்டார் என்பதை திண்டுக்கல் வெற்றி பற்றி அவர் விடுத்திருக்கும் அறிக்கையே தெளிவாக எடுத் துக் காட்டிவிட்டது. அ. தி. மு. க.வுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி பேரறிஞர் அண்ணாவின் கொள்கை களுக்கு கிடைத்த வெற்றியென்று அ. தி. மு. க. தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் திட்டவட்டமாக சுட்டிக்காட்டி யுள்ளார்.

திண்டுக்கல் இடைத் தேர்தல் பிரசாரத்தின்போது, மதுவிலக்கு ரத்து, அராஜகம், அடக்குமுறை, அதிகார துஷ்பிரயோகம், ஊழல், இலஞ்சம், போன்ற இன்னபிற குற்றச்சாட்டுக்களை தி. மு. கழக ஆட்சிமீது அ. தி. மு. க. சுமத்தியுள்ளது. ஜனநாயக முறைப்படி திண்டுக்கல் தொகுதி மக்களின் தீர்ப்பை அவதானிக்கும்போது, தி. மு. கழக ஆட்சிமீது அ. தி. மு. க. சுமத்தும் குற்றங்களை மக்கள் நம்புகிறார்கள் என்றே கருதவேண்டியுள்ளது.

எனவே தி. மு. க. தலைவர்கள், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதை உணர்ந்து—பதட்டமடையாது, ஆத்திரப் படாது தங்களைத்தாங்களே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய கட்டம் வந்துவிட்டது. அ. தி. மு. கவும் ஏனைய எதிர்க்கட்சிகளும் சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்கு புள்ளி விபரத்துடன் அவர்களை மடக்கக்கூடிய பதில்களைத் தந்தால் மட்டும் போதாது — அக்குற்றச்சாட்டுக்களில் உண்மையுண்டா என்று தங்கள் மனச்சாட்சியைத் தட்டிக் கேட்டு, தவறு இருந்தால் அதைத்திருத்திக் கொள்வதற்கு தாராளமனத்துடன் தி. மு. க ஆட்சியினர் முன்வர வேண் டும்.

அது மட்டுமன்றி தி. மு. கழகத்திலுள்ள சிலரது அண் மைக்கால பேச்சுக்களும், அறிக்கைகளும் மிகவும் தரங் குறைந்தவையாகவும் பண்பற்ற நிலையுள்ளனவாயும் இருந் ததையும் தமிழ்மக்கள் அவதானித்து வந்திருக்கிறார்கள்.

தி. மு. கழகத்தலைவர் கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்கள் கூறியுள்ளதுபோல் ஓர் இடைத்தேர்தலின் முடி வைக்கொண்டு, முழு மாநிலத்தின் அரசியலை நிர்ணயிக்க முடியாதென்பது உண்மையானாலும், தி. மு. கழகத்தலைவர் கள் தங்களைத்தாங்களே சுயபரிசோதனை செய்துகொள்ள வும், வீணான வரட்டுக்கௌரவத்தையும், வாதத்துக்கு வாதம் புரிவதையும் தவிர்த்து, தங்கள் ஆட்சிமீது சுமத்தப் படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையிருந்தால் அவற்றைத் திருத்திக்கொள்ளவும் திண்டுக்கல் மக்களின் தீர்ப்பினை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும்.

இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தி. மு. க. வினரும்சரி, அ. தி. மு. க. வினரும் சரி, எமது நண் பர்களே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை கொண்ட இந்த இரு கட்சியினரில் எவர் தேர்தலில் வெற்றி பெற்றாலும் எமக்கு மகிழ்ச்சிதான்!

நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல—அண்ணாவின் தம்பி மார்களால் வழி நடத்திச்செல்லப்படும் தி. மு. க., அ. தி. மு. க. ஆகிய இரண்டு அணிகளில்—ஏதோ ஓர் அணியை பின்பற்றி, அண்ணாவின் வழியில் தமிழ்நாட்டு மக்கள் நடைபோடுவார்களேதவிர வேறு பாதைக்கு திசைதிரும்ப மாட்டார்கள் என்பதே திண்டுக்கல் தீர்ப்பின் சாராம்ச மாகும்.

# மே 22-ல் சென்னையில் துக்கதினம்! இளைஞர்பேரவையின் ஆர்ப்பாட்டம்

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டரீதியாக இலங்கையில் வாழும் ஏனைய இனமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதே சம உரிமை அளிக் கப்படவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, இலங்கைத் தமிழர் சார் பில் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்துக்குமுன் ஆர்ப்பாட் டம் நடைபெற்றது.

இலங்கையின் குடியரசு நாளாகிய மே 22-ம் நாள் இந்த ஆர்ப்பாட் டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இக்கோரிக்கையை வலியுறுத்தி இலங்கைத் தூதுவரக அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனம் எம். ஏ. இலங்கைத் தமிழர் நலவுரிமைச் சங்கத்தலைவர் ஏ. எஸ். மணவைத்தம்பி ஆகி யோர் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கினர்.

நாட்டின் மூன்றில் ஒரு பங்கினராகவுள்ள இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க உலகத் தமிழர்கள் போராடுவார்கள் என்று ஆர்ப் பாட்டத்தையடுத்து நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட் டது.

இந்தியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களும் மே 22-ம் நாளை துக்க நாளாக அனுட்டித்தார்கள். கறுப்பு பாட்ஜுகளை அவர்கள் அணிந்திருந்தார் கள்.

இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கைத் தமிழர்களை, மே 22-ம் நாளை துக்க நாளாக அனுட்டிக்குமாறு தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத் திருந்தது தெரிந்ததே.

## குடியரசு நாளில் தமிழ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் கூட்டணியின் இத் தீர்மானத்துக்கு அமைய தமிழ் மக்கள் கட்டுப்பாட்டு டன் மே 22ம் நாளை துக்க நாளாக அனுட்டித்தனர்.

குடியரசு நாளன்று பாட சாலைகளுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும்கட்டாயமாக வரவேண்டுமென நிர்பந்திக் கப்பட்டிருந்தும் தொண் ணூற்றைன்பது சத விதமா னோர் அதைப் புறக்கணித் தனர். தமிழ் பகுதியில் அர சாங்கம் நடத்திய குடியரசுக் கொண்டாட்டங்களில் பொலீசாரும், அதிகாரிகளும் மட்டுமே கலந்து கொண்ட னர்.

குடியரசு எதிர்ப்பு நாளை யொட்டி பெருந்தொகை யான பொலீசாரும் இராணு வத்திலரும் யாழ்ப்பாணத் தில் குவிக்கப்பட்டிருந்தனர்.

குடியரசு எதிர்ப்பு நாளின் முக்கிய நிகழ்ச்சியாக தமிழர் கூட்டணிக் கொடி கள் ஆங்காங்கு ஏற்றப்பட் டன. காலை 8.30 மணிக்கு பெருவாரியான மக்கள திரண்டு நிற்க, தமிழர் கூட் டணித் தலைவர்கள் கொடிக் கம்பத்தை சூழ்ந்து நிற்க, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தேசிய கீதம் பாட, செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழர் கூட்டணி தலைமைச் செயலகத்தில் உதய சூரியன் கொடியை ஏற்றிவைததார். சட்டத்தை மீறிய இக்கொடி யேற்று வைபவத்தில் கலந்து கொள்ளும்படி யாழ் அர சாங்க அதிபருக்கும், யாழ் பொலீஸ் அதிபருக்கும் கூட் டணி இணைச் செயலாளர் தர்மலிங்கம் அழைப்பு அனுப்பியிருந்தது குறிப்பி டத்தக்கது. மக்கள் கரகோ ஷத்திடையே உதய சூரியன் கொடி வானளாவப் பறந் தது—தமிழ் நாடு அமைப் போம் என்ற கோஷமும் கூட எழுந்தது.

இவ்வைபவத்தில் தமிழ் மக்கள் எடுக்கவேண்டிய ஏழு உறுதி மொழிகளை திரு. அமிர்தலிங்கம் வாசிக்க, கூடியிருந்தோர் உரத்துச் சொன்னார்கள். திருவாளர் கள் தம்பித்துரை, உடுப் பிட்டி சிவா, ஜெயக்கொடி, வி. தர்மலிங்கம், ஞான மூர்த்தி, குமரகுரு, ஆ. துரைராசசிங்கம், என். ரீ. செல்வத்துரை, திருநாவுக் கரசு, சு. நடராசா, வி. என். நவரத்தினம் ஆகியோ ரும் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து திரு நெல்வேலி, பண்டத்தரிப்பு, மல்லாகம், சுந்தரோடை, சுப்பீழான், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச் சேரி, பத்தூர் வேலணை ஆகிய இடங்களிலும் உதய சூரியன் கொடிகள் கம்பீரமாக ஏற்றப்பட்டன.

பண்டத்தரிப்பில் துப்பாக்கி ஏந்திய பொலி சார் பொது மக்களை மிரட் டியும், பொது மக்கள் அஞ் சாது நின்று தமிழர் கூட்ட ணியின் கொடியை ஏற்றி யது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவும் திருகோணமலையில் திரு. நேமிநாதனும் கொடியேற் றினர். மட்டுநகரிலும் உதய சூரியன் கொடி திரு. இராச துரையின் வீட்டு வாசலில் பறக்கவிடப்பட்டிருந்தது. அக்கொடியை காரில் வந் திறங்கிய யாரோ சில ரௌ டிகள் அறுத்துச் சென்ற தாக திரு. இராசதுரை பொலிசில் புகார் செய்துள் ளார்.

இக் கொடியேற்று விழா வில் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் கூறியதா வது:

'தமிழ்நாட்டின் சுதந்திரக் கொடியை ஆடம்பர வைப வத்துடன் ஏற்றிவைத்துள் ளோம். கூட்டங்களிலும் வேறு இடங்களிலும் கொடி ஏற்றுவதற்கும், இந்த வைப வத்திற்கும் வித்தியாசம் ஒன்று உண்டு.

இன்று தென் இலங்கை யில் மக்கள் தமது சுதந்தி ரத்தை கொண்டாடுகின்ற னர் இதே வேளையில், தமிழ் இனமும், இக்கொடியை ஏற்றியதன் மூலம் சுதந்தி ரத்தைபெற, விடுதலையை அடைய தமிழகத்தை அமைக்க உறுதி எடுத்துள் ளது. அதன் சின்னமாகத் தான் இந்த வைபவம் இடம் பெற்றுள்ளது. உயிரைக் கொடுத்தாவது, உதிரத்தை சிந்தியாவது, உதயசூரியன் கொடியை காக்கவேண்டும். சுதந்திரத்தமிழ் நாடொன் றை அமைத்தே தீருவோம்!

ஆண்ட பரம்பரையை மீண்டும் ஒருமுறை ஆளச் செய்வோம், என உறுதி எடுக்கும் விதத்தில் மன உறுதிகொள்ளவேண்டும். இன்றைய அரசியல் அமைப்பு எம்மைக்கட்டுப் படுத்தாது என உறுதி பூணு வோம்.

## எழுத்தாளர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துப்பேசினார்.

கவிஞர் நீலவாணன் தலை மையில் 'வியர்வைக்கு முன் டோவிலே' எனும் பொரு ளில் சிறப்பான கவி அரங்க மொன்றும் நிகழ்ந்தது. இவ் வரங்கின் கவிஞர்களான கல்முனைப் பூபால், தோ. இராசம்மா, மன்சூர், ஏ. காதர், பரீதா இஸ்மாயில், பாலமுனை பாறூக் ஆகியோர் தம் கவிதைகளை அரங்கேற் றிப்பாடினர்.

## இனவிடுதலைக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு வருவ தாலும்;

(3) அநியாயக் குடியுரி மைச் சட்டங்களால் நாடற்றவர்களாக் கப்பட்ட மலைநாட்டு தமிழ்த் தொழிலாளர்களின் தொழில் உரிமைக்கும், அர சாங்கத்தின் பாரபட்ச தோட்டச் சுவிகரிப்புகொள் கையால் ஆபத்து சூழ்ந்து வருவதோடு, அப்படிப் பாதிக்கப்பட்ட தமிழ்த் தொழிலாளர்கள் தமிழர் தாயகமான, வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள தரிசு நிலங்களை சாகுபடி செய்து வாழும் உரிமையும் துப் பாக்கிமுனையில் பறிக்கப் பட்டு வருவதாலும்;

(4) மொழி அடிப்படை யில் தரப்படுத்தல் என்ற நெறியற்ற திட்டத்தால், தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி பெறுவதற்கு சம சந்தர்ப்பம் மறுக்கப்பட்டு எம்மினத்தின் வருங்கால சந்ததியினரின் வாழ்வே பாழ்படுத்தப்பட்டுவருவதா லும்.

(5) தமிழ்க்குழந்தைகளின் போதனா மொழியையே சிங் களமாக மாற்றி அதன்மூலம் இனமாற்றம் செய்து தமிழி னத்தையேபூண்டோடு அழிக் கும் நடவடிக்கையின் முதல் அங்கமாக புத்தூர் பஞ்சசிக வித்தியாசாலை போன்ற வற் றில் சிங்களத்தை முதல் வகுப்பில் அரசாங்கம் போதனாமொழியாக்கியிருப் பதாலும்,

(6) கல்வி, தொழில்பொரு ளாதார அபிவிருத்தி ஆகிய எல்லாத்துறைகளிலும் தமிழ் மக்களும் தமிழ்ப் பிரதேசங் களும் பாரபட்சமானமுறை யில் புறக்கணிக்கப்பட்டு தமிழினத்தின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாக ஆக்கப் பட்டு வருவதாலும்.

இனத்தின் வாழ்வை வள முள்ளதாக்கவும், இனத்தின் தனித்தன்மையைக் காத்து அழிவுப்பாதையிலிருந்து தமி ழினத்தை மீட்கவும் ஒரேவழி ஈழம் வாழ் தமிழினத்தின் பாரம்பரிய தமிழகத்தில் தமி ழினத்தின் சுயாட்சியை நாட் டுவதேயன்றி வேறு வழி யில்லையென்று தமிழர் கூட் டணியின் நடவடிக்கைக்குழு கருதி, அதிமுக்கியத்துவம் வாய்ந்த இக்கருத்தை கூட் டணியின் அங்கமான கட்சி களின் பரிசிலனைக்கு சமர்ப் பிப்பதோடு இது தொடர் பாக எடுக்கவேண்டிய நட வடிக்கைகளை எடுப்பதற்கு ஓர் அதிகாரசபையை நிய மிப்பதாக கூட்டணி தீர் மானிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அனைவரும் தமிழீழம் நோக்கி வருக!

## எல்லா வளமும் கொண்ட தாயகம் எங்கள் இன்பத் திருநிலம் தமிழீழம்!

## தமிழ் நிலம் காத்து நிற்போம்! இழந்த ஆட்சியை மீண்டும் அமைப்போம்!

**முத்து-சுப்பிரமணியம்**

உலகில் பல மொழி பேசுகின்ற மக்கள் பல இடங்களிலும் வாழ்ந்து வருவதை இன்று நாம் காணுகின்றோம். மக்கள் தொழிலையும், செல்வத்தையும் தேடி தங்கள் பிறப்பிடங்களையும் மறந்து குடிபெயர்ந்து போனதையும், நோயால், நீரால், இயற்கையின் சீற்றத்தால் இடம் விட்டுப் பிரிந்து சென்றதும், செல்வதும் அன்றாடம் நாம் காணக்கூடிய நிகழ்ச்சியே! இன்று உலகம் எல்லாவற்றையும் நாமே அரசாளவேண்டுமென்ற ஆசையுடைய பல அரசுகளையும் நாம் காண்கிறோம். கம்யூனிசமும், சோசலிசமும் இன்று உலகத்திலுள்ள சகல அரசுகளும் தமது கொள்கை என்று பறைசாற்றுகின்றன. மறுபுறத்தில் அமெரிக்க முதலாளித்துவமும் உலக அரங்கிலே பண மீட்டுவதில் முனைகிறது. கம்யூனிசத்தை ஏற்று அதைக கைக்கொண்ட ரஷ்சியா, சீனு போன்ற நாடுகள் கூட தோழமை மனப்பான்மையுடன் வாழ முடியவில்லை அரசியலோடு பொருளாதாரமும் பின்னிப் பிணைந்து இருப்பதால், நாடுகளுக்கும் மக்களுக்கும் இந் நிலை ஏற்பட்டு விடுகிறது.

### தமிழர்கள் தமிழ் மண்ணிலே வாழ்ந்தார்கள்

இலங்கையில் சிங்கள, தமிழ் அரசர்கள் காலத்துக்குக் காலம் அரசு செலுத்தியதை நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம். அதே நேரத்தில் வடக்கே, கிழக்கே சிங்கள மன்னர்கள் அரசாண்ட சரித்திரத்தையும் நாம் மறப்பதற்கில்லை. தெற்கேயும் அனுராதபுரம், பொல்லநறுவை போன்ற பகுதிகளையும் தமிழ் மன்னர்கள் அரசாண்ட செய்தியையும் சரித்திரம் பகருகிறது; படை எடுப்பால் ஏற்பட்ட அரசுகள் நிலைக்கவில்லை; நிலைக்கவும் முடியாது. அதனால் அவர்களோடு வந்த மொழி, சமயம், கலாச்சாரங்களும் அவர்களின் அரசின் அஸ்தமனத்தோடு அழிந்து போயிற்று.

### இஸ்ரேல் புகட்டும் பாடம்

பெரும்பான்மை இனமாக இல்லாமல் சிறுபான்மையினமாக வாழ்ந்த இஸ்ரேலியர் சிறந்த அறிவாற்றலைப் பெற்றிருந்தார்கள். விஞ்ஞானத்தில், தொழில் நுட்பத்தில் வல்லவர்களாக இருந்தனர். இதனால் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற மேலைத் தேசங்களில்எங்கும் தொழில் வாய்ப்பைப் பெற்றனர். பொருளீட்டினர். அதே நேரத்தில் அவர்களால் தொழில் செய்யவும், பொருளீட்டவும் சென்ற நாடுகளில் நிரந்தரமாக வாழ முடியவில்லை தமக்கென ஒரு தாயகத்தை கட்டி எழுப்பினர். வரண்ட பாலைவனத்தில் இன்று இஸ்ரேலை நாம் எமது கண்முன்னே செல்வச் செழிப்போடு காண்கின்றோம். இப்பாடம் தமிழர்களுக்கு இன்று மிகவும் அவசியம். தேவையானதாகும்.

### போத்துகீசரும் ஆங்கிலேயரும்

யாழ்ப்பாணத்தைச் சங்கிலிய மன்னனிடமிருந்து போத்துக்கீசர் போராடியே பெற்றனர். கடைசித் தமிழரசும் இலங்கையில் மாற்றானிடம் மண்டியிடவில்லை. அடுத்து ஒல்லாந்தரும் முடிவில்லை, அடுத்து ஒல்லாந்தரும் முடிவில் ஆங்கிலேயரும் எம்மை அரசாண்ட போது இலங்கை பரிபாலனத்துக்காக சிங்களப் பகுதியும் தமிழ் பகுதியும் ஒன்றாக இணைக்கப்பட்டது உத்தியோக வாய்ப்பாலும், வியாபார நோக்கோடும், புகையிரத சேவை வடக்கே, கிழக்கே, ஆரம்பமாகிய போதுதான் தமிழ் மக்கள் குடிபெயர்ந்து சிங்களப் பகுதிகளுக்கும் சென்றனர். அதே நேரத்தில் சிங்கள மக்களும் வியாபார நோக்கோடு வடக்கே, கிழக்கே வந்ததையும் நாம் மறப்பதற்கில்லை. தெற்கே சென்றால் சிரான பகட்டான வாழ்வு வாழ்வதோடுபணமும் சேர்க்கலாம் என்ற நிலையிலும், அதை சீக்கிரமாகவும், சுலபமாகவும் சேர்க்கலாம் எனத் தமிழர்கள் எண்ணியதில் வியப்பில்லை. கொழும்பு தலைப்பட்டினத்துடன் வியாபார கேந்திரஸ்தானமாகவும் இன்று இருக்கின்றது. இதனால் தமிழர்கள் அங்கு இருப்பதும், அலுவல் காரணமாகச் செல்வதும் இன்று தவிர்க்க முடியாததாகி விட்டது.

### தேசிய நெருக்கடி

இலங்கையில் இன்று தேசிய நெருக்கடி உருவாகியிருப்பதை எல்லோரும் அறிவோம். வெளி நாடுகளிலிருந்து ஆட்சியாளர்கள் பெற்றுக்கொண்ட கடன் பழு இன்று வட்டி ரூபத்திலும், முதல் என்ற கடனும் இன்று அந்நியச் செலவாணியில் மிகக்கூடிய பங்கைக் கரைத்து எடுத்துக்கொள்ளுகிறது. அத்தியாவசியமான, எரிபொருள், இயந்திரம், மருந்துவகை, இவற்றிக்கே அந்நிய செலவாணி போதாதிருக்கின்றது. உலக நாடுகளின் உணவு விலைகள் விசம் போல் ஏறிக்கொண்டிருக்கின்றது. இதனால் எங்கும் எதிலும் 'பற்றாக்குறை' மனதில் விரக்தி, விடிந்தால் விலை கூடிவிடும் என்ற பீதி எவரிடத்திலும் காண்கின்றோம்.

ஆரம்பத்தில் உப உணவு செய்கை வாய்ப்பளிக்காவிடினும் இறக்குமதியற்ற வெண்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய பொருட்கள் பயிரிடுவது லாபகரமான தொழிலாக ஆரம்பித்தது. இன்று நெல் வேளாண்மையும் குறிப்பிடத்தக்க ஆதாயம் கிடைக்காவிடினும் நஷ்டமில்லாத தொழிலாக இருக்கின்றது. இவைகளைப் பயிரிடுவதானால் உருளைக் கிழங்கைத் தவிர்த்து உஷ்ணமான வரண்ட நிலமே மிக வாய்ப்பானதாகும். இப்படியான தரைத் தோற்றத்திலே வட,கிழக்கு மாகாணம் அமைந்துள்ளது தமிழர்களின் வரப்பிரசாதமாகும்.

இதன்மூலம், இவற்றை நாம் பயிரிடுவதன் மூலம் நாம் பணம் சம்பாதிப்பது மட்டுமல்ல பட்டினியையும் தவிர்க்கலாம் இதன்மூலம் நாம் முழு இலங்கைக்கும் வாழ்வு கொடுக்கலாம். இன்று விவசாயத்தினால் பெறுகின்ற வருமானம் அரசாங்க உத்தியோகத்தால் பெறமுடியாது என்பதையும் தமிழர்கள் உணருகிறார்கள்; மிக உயர்ந்த பதவி வகிப்பவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அப்பதவிகள் காலக்கிரமத்தில் சிங்கள மக்களால் நிரப்பப்படும் என்பதையும் நாம் உணர்ந்துகொள்வோமாக!

### போஸ்காட் பொருளாதாரம்

வட இலங்கையின் கம்யூனிஸ்ட்தோழர்கள் எம்மைப் பார்த்துத் தமிழரசுப்பொருளாதாரம் போஸ்காட் பொருளாதாரம் எனக் கேலி செய்தனர். இன்று அவர்களும் போஸ்காட் பொருளாதாரத்தில் நம்பிக்கையற்று அபிவிருத்திச் சபைகள், கலைவிழாக்கள் தமிழ் நாட்டுப் பிரமுகர் அழைப்பு, இப்படியாக எம்மோடு இணைகிறார்கள். அவர்கள் பாதை, அவர்கள் தீர்க்க தரிசனம் ஆகியவற்றை நாம் இப்போது உணரலாம்.

வடக்கேயிருந்து தெற்கு நோக்கிச் செல்லுகின்ற லொறிகளில் உணவுப் பொருட்கள் செல்வதையும், தெற்கேயிருந்து வடக்கே அந்நிய செலவாணிப் பொருட்கள் வருவதும் இன்று அவர்களுக்குத் தெரியும். இயற்கைத் துறைமுகம் திருமலையிருக்க, வடக்கே அத்திவாரக்கல் இடப்பட்ட காங்கேசன்துறையிருக்க அந்நிய செலவாணியான எரிபொருள் எரிந்துபோவதும், இயந்திரத் தேய்வும், மனித உழைப்பும் வீணுவதை மிச்சம்பிடிக்க இத் தமிழர்களுக்கு விருப்பமில்லைபோலும். அல்லது இவர்கள் சொல்லி அரசாங்கம் செவிமடுக்கவில்லையோ யார் அறிவார். எது எப்படியாயினும் வடக்கும் கிழக்கும் வாய்ப்பான வாழ்வளிக்கும் நிலம் என்பதை இவர்கள் இன்று ஏற்றுக்கொள்வார்கள்.

### புதிய அரசியல் அமைப்பு

இலங்கையில் வாழுகின்ற சிங்கள மககள், குறிப்பாக கம்யூனிஸ்ட், சமசமாஜி, சுதந்திரக் கட்சியினர், இந்த நாட்டுக்கென புதிய அரசியல் அமைப்பை எழுதி அதை ஏற்றுச் சட்டமாக்கியும், விட்டனர். அவர்களின் மதமான பௌத்தை அரசமதமாக்கிவிட்டனர். அவர்களின் மொழியான சிங்களம் அரசகரும மொழியாகிவிட்டது அவர்களின் தேசம் சிறிலங்காவாகிவிட்டது: அவர்கள் விரும்பிய ஒற்றையாட்சி அமைக்சப்பட்டுவிட்டது. அவர்கள் விரும்பியவை அப்படியே செயல்படத் தொடங்கியுள்ளது. வடக்கே கம்யூனிசம் பேசுவோர், ரஷ்ய பொருளாதாரமும் அரசியல் அமைப்பும் பற்றிப் பேசுகிறுர்கள். ஆனல் அதே நேரத்தில் இத்தனையையும் ஏற்ற கம்யூனிஸ்ட் கட்சியும் அரசில் அங்கம் வகிக்கின்றது.

தமிழர்கள் விரும்பிய அரசியல் அமைப்பையோ, மொழி, நிலம், பற்றிய உரிமையையோ பெறமுடியவில்லை. காரணம் அவர்கள் ஆள்பவர்கள் இவர்கள் ஆளப்படுபவர்கள். இதை அரசாங்கத்தை ஆதரிக்கும் சில தமிழர்கள் ஏற்றுக்கொண்டது அவர்களின் தாழ்வு மனப்பான்மையே காரணமாகும்.

### கமத்தொழில், கைத்தொழில், கடல்தொழில் வாய்ப்புகள்

தமிழ் பிரதேசத்தில் கமத்தொழில் கைத்தொழில் கடல்தொழில் வாய்ப்புக்கள் என்றும் போல் இன்று இருக்கின்றன. தெற்கே வாழுகின்ற சகல தமிழர்களுக்கும் கைகொடுக்கும் நிலம் தயாராக இருக்கின்றது. இத்தொழில்கள்மூலம் மற்றவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் அடிமையாகாமல் சுதந்திர மனிதர்களாக நாம் வாழமுடியும். இதனால் எமது பகுதிப் பொருளாதாரம் வேகமாக வளரும். கைத்தொழில்களைத் தேசியமயமாக்குவதைப் போல கடல் தொழிலையும், கமத்தொழிலையும் தேசியமயமாக்கப்படப்போவதில்லை. அத்தோடு பசிப்பிணியிலிருந்தும் நாம் எமது மக்களை காப்பாற்றவும் முடியும்.

### சரியான சந்தர்ப்பம்

தமிழர்களின் பொருளாதாரத்தை இன்றுவரை தமிழ் மக்கள் நிர்ணயிக்கமுடியவில்லை. வளம்படுத்த அவர்களுக்கு வாய்ப்புக்கொடுக்கப்படவில்லை. அரசாங்கமோ, போஸ்காட் பொருளாதார மன்னர்களோ எமக்கு வாய்ப்பளிக்காமல் தெய்வமாகவே தமிழர்கள் வாழ வழிகாட்டியுள்ளது. இப்பொருளாதாரத்தைக் கொள்ளையடிக்க எவராலும் முடியாது எல்லோருக்கும் தேவையான உழைப்பு, நிலம், எம்மிடமுண்டு. எமக்கென ஒரு அரசியல் அமைப்பை நாம் ஏற்படுத்த எல்லோரும் முன் நின்று உழைப்போம். கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் தெரிவித்தநேரத்தில் தந்தை செல்வநாயகம் அவர்கள் குறிப்பிட்ட தீர்க்கதரிசனம் வீண் போகவில்லை. அன்று (1971ல்) தெய்வம்தான் எம்மைக் காப்பாற்றியது- இன்றும் தெய்வம்தான் எம்மைக் காப்பாற்றுகிறது.

### தமிழர் அனைவரும் வருக

எல்லா வசதிகளும் கொண்ட நாடு நம்மிடம் இருக்க நாம் ஏன் இன்னமும் வீரமின்றி இருக்கவேண்டும். தமிழர் அனைவரும் தாயகத்துக்கு வருவோம் விடுதலை வீரர்களாக விவசாயத்தில் முன்னேறுவோம். எமக்குத் தேவையானவற்றை நாமே செய்து நற்பலன் காண்போம்.

ஒரு மொழி பேசிய பாகிஸ்தான் துண்டாக்கப்பட்டது. அக்கிரமம், மற்றவர்களை அடக்கியாள்வது அங்கேயும் செயல்படவில்லை. வியட்நாம் பிரதேசத்தைவிட்டு அமெரிக்கா வெளியேறுகிறது. பங்களாதேசை உலகில் பல அரசாங்கங்கள் அங்கீகரித்துவிட்டன. பாகிஸ்தான் போர் கைதிகளை பங்களாதேஸ் விடுதலை செய்தால் அங்கீகரிப்பதாக பாகிஸ்தான் கூறுகிறது. சுதந்திர சூரியன் எல்லாத் தேசத்திலும் பவனிவரும் போது எமக்கு மட்டும் சுதந்திரம், உரிமை, கிடைக்காதா? நம்பிக்கையுடன் பணிபுரிவோம்.

### எமக்கு நாமே

எமக்கு நாமே துணை யாரையும் அழைக்கத் தேவையில்லை மனிதாபிமானம் உள்ள நல்லவர்களும் தெய்வமும் எம்முடனே இருக்கின்றன. உலகில் வாழுகின்ற மக்களில் எந்தச் சாராருக்கும் வேறொரு சாரார் நியாயம் வழங்கியதில்லை; அது அவர்களின் பிரச்சினை. நாம் சத்தியத்தின் வழியில் செல்லுகிறோம், உண்மைகள் மறைந்துவிடுவதில்லை. யாரோ சிலர் தவறான வழியில் செல்லுகிறார்கள் என்று நாம் மனம் வருந்தவேண்டாம். காலம்வரும் போது அவர்கள் தானே திருந்தி விடுவர்.

தமிழர்களுக்கு தமிழ் மொழி தேவை அது அரசியல் அந்தஸ்துப் பெற

(6-ம் பக்கம் பார்க்க)

## உயிரையும் ஈவேன்!

—சந்தியூரன்—

முத்தமிழ் முரசொலிக்க
முடி மன்னர் சிரம்து திக்க,
வித்தகப் பெருநலத்தால்
மேதினி அனைத்தும் போற்ற
புத்தெழிற் புகழ்பரப்பி
பொன்னரசோச்சி நின்ற
பத்தினிச் செல்வீ! ஞானப்
பைந்தமிழ் அரசி வாழ்க!

மைவரை இமய வெற்பும்
மறிகடற் குமரியென்னும்
வையகப் பெருநிலத்தில்
வான்புகழ் சிறக்க நின்று
உலகெலாம் பணிந்து போற்ற
உறுதியாய் நின்ற தெல்லாம்,
பொய்யர் தம் சூழ்ச்சி மிக்கப்
பொலிவிழந் தழிதல் கண்டு,

என்னுளம் கொதித்ததம்மா
எரிமலை போலப் பொங்கி
செந்நீரை வடித்து நெஞ்சில்
சிதைத் தீயை மூட்டுதம்மா
மன்னர் தம் மடிதவழ்ந்து
வளர்ந்த பொற் செல்வி! உன்றன்
உன்னதப் பெருவாழ்வுக்கே
உயிரையும் ஈவேன் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சகோதரனுக்கு ஒரு கடிதம்

கொஞ்சக் காலமாக நாட்டின், கிழக்கு, தெற்குப் பகுதிகளிலே போடப்படும் அரசியல் மேடைகளிலே இன்னுமொரு சுரமும் அதிகமாக ஒலிப்பதை நீ அவதானித்தாயா?

"இந்த நாட்டிலே காலாதிகாலந்தொட்டுச் சிங்களவர்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகிறார்கள்" எனச் சிங்கள அரசியல் வாதிகளும் அவர்களுடைய கையாட்களும் கூறித் திரிவதையே நான் இங்கு குறிப்பிடுகிறேன். சிங்கள அரசியல் வாதிகள் இப்படித்தான் பேசுவார்கள். ஏனெனில், அவர்கள் தான் முஸ்லீம் மக்களைத் தமிழ் மக்களிடமிருந்து பிரித்து எப்படியாவது தம் போக்குக்கு தம்மைக்குள் போட்டுக்கொள்ள வேண்டும் எனத்திட்டம்போட்டிருப்பவர்களாயிற்றே! அதற்காக அவர்கள் வரலாற்றை மறைத்து மேலுக்கு இப்படி இனிமையாகத்தான் பேசுவார்கள். அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், முஸ்லீம் சமூகத்திலுள்ள சிலர் அந்த அரசியல் வாதிகளின் கூற்றுக்கு ஆமாம்சாமி போடுகிறார்களே அதை நினைக்கையில் தான் பெரும் வேடிக்கையாக இருக்கிறது.

அவர்களுக்கு உண்மை வரலாறு தெரியாதா? இல்லை அதைப் புரட்டிப்பார்க்கத் தான் அவர்களுக்கு மனமில்லையா? எல்லாம் சுத்தமான சுயநலத்துக்காகத்தான் தம்பி! நம் உரிமைகளுக்காக எமது உயிர் உட்பட எதையுமே தியாகஞ்செய்வதற்கு தயாராக இருக்கவேண்டிய சமயத்திலே நமக்குள்ளே இன்று ஒரு சுயநலக்கும்பல் பெருகிவருகிறதே இந்த வேதனையை நாம் யாரிடம் சொல்லி அழுவோம்?

சிங்கள அரசியல் வாதிகள் தான் ஏதோ உள்ளார்த்தத்துடன் தமது கொடிய நாக்கிலே தேனைத் தடவிக்கொண்டு பேசுகிறார்கள் என்றால், அதற்கெல்லாந்தான் உன் சமூகத்துக்குள்ளே இருக்கும் சுயநலவாதிகள் சிலர் சும்மாவே தலையாட்டி ஆமோதிக்கிறார்கள் என்றால் உனக்குமா உண்மை வரலாறு தெரியாமல் போய்விடும்?

1915 இல் இங்கு சிங்கள—முஸ்லீம் இனக்கலவரம் ஏற்பட்டு இரத்த ஆறு ஓடிய வரலாற்றை அத்தனை எளிதில் உன்னால் மறந்துவிடத்தான் முடியுமா என்ன? இலங்கையின் சரித்திரத்திலேயே மிகப்பெரிய இனக்கலவரம் அதுதானே! அதிக அளவிலே இனக்கொலைகள் நடைபெற்றதும் அப்பொழுதுதானே! இந்த வரலாற்று உண்மையை எந்த அரசியல் வாதியாவது மழுத்திட முடியுமா?

மசூதிகளின் அருகே மேளங்கள் அடிக்கக் கூடாது என்பதை அறிந்திருந்தும் கம்பளை மசூதியிலே, முஸ்லீம்கள் அமைதியான தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளையிலே அவ்வழியே 'பெரஹரா' ஊர்வலமாக வந்த சிங்களவர்கள் வேண்டுமென்றே மேளங்களை முழங்கி முஸ்லிம்களின் தொழுகைக்குப் பங்கம் விளைவித்ததன் மூலம் கலகத்தைத் தொடக்கி வைத்தார்கள். இதுகொடிய இனக்கலவரமாக மாறி, நாடெங்கும் காட்டுத் தீயெனப் பரவியது. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் முஸ்லிம்கள் கொடூரமான முறையிலே கொலை செய்யப்பட்டார்கள்!

ஆனால், நல்லவேளையாக அப்போது பதவியில் இருந்தது ஆங்கிலேய அரசாங்கம் அதற்குச் சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடே இடையாது. அத்தோடு கட்டுமீறிய கலவரத்தை அடக்குவதற்கென ஆங்கிலேய அரசாங்கத்தினால் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட இராணுவத்திலே அங்கம் வகித்த பெரும்பான்மையோர் முஸ்லீம் வீரர்கள். இந்த இரண்டு சாதகங்களினாலும் கலவரம் விரைவிலேயே நசுக்கப்பட்டது; முஸ்லிம் மக்களும் மேலும் அழிவின்றிப் பிழைத்துக்கொண்டார்கள்!

ஆனால், இன்றோ பதவியில் இருப்பது முழுக்க முழுக்கச் சிங்கள மக்களின் நலனை மட்டும் பேணுவதற்கென்றே இருக்கும் சிங்கள அரசாங்கம். இராணுவமோ ஒரே சிங்கள மயம். அன்று ஏற்பட்டதுபோல சிங்கள—முஸ்லிம் கலவரம் இன்று ஏற்படுமானால் அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதை நீ சிந்தித்துப்பார்த்திட வேண்டும். அதே சமயம் இன்று அரசியல் மேடைகளிலே பேசப்படும் சிங்கள—முஸ்லிம் ஒற்றுமை வெறும் போலித்தன்மையானது என்பதையும் நீ ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

திருவாளர் கொப்பேகடுவ 'மக்கள் அரசாங்கத்திலே' ஒரு 'மாண்புமிகு' அமைச்சராம். அவர் சில வாரங்களுக்கு முன்பு ஒரு கூட்டத்திலே பேசியிருக்கிறார். பேசியிருக்கிறார் என்பதை விடக் கடைந்தெடுத்த வகுப்புவாதத்தைக் கக்கியிருக்கிறார்; கலப்பற்ற இனவெறியைக் கொட்டியிருக்கிறார் என்றெல்லாஞ் சொல்வது தான் சரி தம்பி!

இந்த நாட்டிலே இனிமேல் கறுப்பையாவுக்குஞ் சுப்பையாவுக்குங் காணி கிடையாதாம். இதுதான் மாண்புமிகு அமைச்சர் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கு!

தம்பி, இங்கே நீ மிகவும் விழிப்பாக இருந்திடவேண்டும். அமைச்சர் எந்தக் கறுப்பையாவையுஞ் சுப்பையாவையும் பார்த்துக் 'காணி இடையாது' என்று சொல்லியிருக்கிறார் தெரியுமா? தமது இரத்தத்தை வியர்வையாக்கி, வியர்வையை இந்நாட்டு மண்ணுக்குப் பசளையாக்கி, இரப்பரையுந் தேயிலையையும் வளர்த்துவிட்டிருக்கும் கறுப்பையாவையும் சுப்பையாவையும் பார்த்துச்சொல்லியிருக்கிறார்; வெளியுலகந் தெரியாது, தற்கால நாகரிகத்தை உணராது, நவீன வசதிகளின் சொகுசுகளை அனுபவியாது [illegible] உழைப்பு என்ற [illegible] நோக்கத்துடன் உழைத்து உழைத்து ஓடாகிப்போன கறுப்பையாவையும் சுப்பையாவையும் பார்த்துச் சொல்லியிருக்கிறார்!

கடின உழைப்பினால் இந்த நாட்டை வளப்படுத்திவிட்டு, தமது சொந்த வாழ்விலே, புறாக்கூடுகள்போன்ற சின்னஞ்சிறு வீடுகளிலே, வறுமையினாலும் நோயினாலும் வாடிக்கொண்டிருக்கும் கறுப்பையாவையும் சுப்பையாவையும் பார்த்துச் சொல்லியிருக்கிறார்!

நமது நாட்டின் பொருளாதாரம் ஒரேயடியாக மண்டையைப் போட்டுவிடாது இன்னமும் குற்றுயிரும் குலையுயிருமாகவாவது இழுத்துக்கொண்டு கிடக்கிறதென்றால் அதற்கு யாருடைய உழைப்பு காரணமாக விளங்குகிறதோ அந்தக் கறுப்பையாவையும் சுப்பையாவையும் பார்த்து அமைச்சர் சொல்லியிருக்கிறார்!

என்ன, இந்த நல்லவர்களை நாட்டுக்காக உழைப்பவர்களைப் பார்த்தா அமைச்சர் இப்படி நன்றி கெட்டதனமாகப் பேசியிருக்கிறார் என்று பார்க்கிறாயா? அவர் இப்படியும் பேசுவார் சந்தர்ப்பம் கிடைத்தால்

**அ. சோமபாலன்**

இன்னும் எப்படியோ வெல்லாங் கூடபேசுவார். ஏன், 'இனிமேல் இந்த நாட்டிலே அப்துல் ஜபாருக்கும் அசன் அலிக்குங் கூட காணி கிடையாது' என்று அவர் கூறினாலுமே நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நாட்டை எப்படியாவது பௌத்த சிங்களமயமாக மாற்றிவிடவேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு இப்படியான நடவடிக்கைகள் எல்லாம் அவசியந்தானே தம்பி!

இங்கு நீ இன்னொரு விஷயத்தையும் கருத்திற்கொள்ளுதல்வேண்டும். முஸ்லிம் மக்கள் இந்நாட்டின் பல பாகங்களிலும் பரவலாக வாழ்ந்தபோதிலும் கிழக்கு மாகாணத்தில் மட்டுமே அவர்கள் மிகவும் நெருக்கமாக வாழ்கிறார்கள். முஸ்லிம் மக்களுக்கு ஏதோ அதிகப்படியான சலுகைகளை அள்ளிக்கொடுப்பதாகக் காட்டிக்கொள்ளும் இந்த அரசாங்கம் தனது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைக் கிழக்கு மாகாணத்திலேதான் தீவிரப்படுத்தி வருகிறது. இதன் அர்த்தம் என்ன? முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களிலேயே அவர்களைச் சிறுபான்மையினர் ஆக்கிவிடவேண்டும் என்பதுதானே.

முஸ்லிம்களின் புனித ஹஜ் யாத்திரைக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறதே அது ஏன்? நான் இக்கடிதத்தின் ஆரம்பத்திலே குறிப்பிட்டுள்ளதுபோல, ஏதோ தற்போதைக்குப் பல சலுகைகளையுங் காட்டி முஸ்லிம் மக்களைத் தன் கைக்குள் போட்டுக்கொள்ளவேண்டும் என எண்ணும் அரசாங்கம் அதே சமயம் இப்பொழுதே முஸ்லிம் மக்கள் [illegible] சாங்கத்தின் மேற்படி நடவடிக்கைகளுக்கு வேறு பொருள் கொள்ளத்தான் முடியுமா என்ன?

தம்பி, மேலும் இக்கடிதத்தை நீட்டிக்கொண்டே போவதற்கு அவசியமில்லையென்றே எண்ணுகிறேன். ஏனெனில், இதுவரையில் உனக்கு எல்லாமே புரிந்திருக்கும் என்பது நிச்சயம். நீ புரிந்துகொண்டுள்ளவற்றை உன் அன்புமிகு நண்பர்களுக்கு, பாசமிகு தம்பி தங்கைகளுக்கு, நேசமிகு மனைவிக்கு, கண்ணினுமினிய குழந்தைகளுக்கு எல்லாம் எடுத்துச் சொல்லிடவேண்டும்.

சிறுபான்மை இனங்கள் இன்றைய இந்த ஆபத்தான நிலைமையிலிருந்து மீளவேண்டுமானால் அதற்கு நாமெல்லாம் ஒரு பெரும் போராட்டமே நடாத்தியாக வேண்டும், என்பதை அவர்களுக்குப் புரியவைத்திட வேண்டும். தம்பி, நாமே போராட்டத்தை ஆரம்பித்து நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க வேண்டுமென்பது எமது நோக்கமுமல்ல. ஆனால் அவசியம் போராடித்தானாக வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். அதுவும் யாரால் இந்தநாட்டின் அமைதியைப் பாதுகாக்கவேண்டிய அரசாங்கத்தினால்!

ஒரு சில உபதபாற் கந்தோர்களை நிறுவியும் நம்மிடையே வாழ்ந்த பெரியார்கள் ஓரிருவருக்கு ஞாபகார்த்த முத்திரைகள் வெளியிடுவதன்மூலமும் நம்மைச் சமாளித்துவிடலாம் என அரசாங்கம் எண்ணலாம். அவை அற்பச் சலுகைகள்; வெறும் எலும்புத்துண்டுகளுக்குச் சமமானவை. நாம் கேட்பது அவற்றையல்ல; எமது அடிப்படை உரிமைகளையே!

தம்பி, எஜமானர்கள் விட்டெறியும் எலும்புத்துண்டுகளைப் பொறுக்குவதோடு திருப்திகொள்ளும் நாய்களாக நாம் வாழ்ந்திடக்கூடாது; மானவுணர்ச்சி மிக்க மனிதர்களாக நாம் வாழ்ந்துகாட்ட வேண்டும். அடிமைகளாக ஆயிரம் நாட்கள் வாழ்வதிலும் பார்க்க சுதந்திரமாக ஒரேயொரு நாள் வாழ்ந்தால் அதுவே போதும் இல்லையா? நமக்குச் சுதந்திரத் தேவை இன்றைய நிலையிலே அதற்கென ஒரு போராட்டமுந் தேவைதான்.

தமிழினம் இன்று ஓரணியிலே திரளத் தொடங்கிவிட்டது. போராட்டத்திற்குத் தன்னைத்தானே தயார் படுத்திக்கொள்ளும்பணியை அது ஓரளவு ஆரம்பித்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

இந்த நிலையிலே முஸ்லிம் சமூகம் என்ன செய்யப்போகிறது? சிறுபான்மை மக்களுக்கு இடப்படும் அடிமை விலங்கினை உடைத்தெறியும் உயர்ந்த நோக்கத்திற்காக தமிழினத்தோடு ஒன்று சேர்ந்து போராடுவதற்கு அது தன்னைத்தானே தயார் படுத்திக் கொள்ள வேண்டாமா? எமதுயிர் தமிழன்னைக்கு இன்னல் ஏற்படுகிறதென்றால் அவள் ஈன்றெடுத்த புதல்வர்களாம் தமிழர், முஸ்லிம்கள் எல்லோருமல்லவா கொதித்து எழவேண்டும்.

விடுதலை யுணர்ச்சியைப் பொறுத்த வரையிலே சமயம் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கவே முடியாது; எமதுயிர்த் தாய் மொழிதான் முக்கியம். இதற்கு அண்மையில் நடந்துமுடிந்த வங்கதேசத்து விடுதலைப் போராட்டம் தக்க சான்றாகும்.

தம்பி, உன் அன்னையோடு நீ பேசும் அன்புத் தமிழுக்கு, உன் மனைவியோடு நீ கொஞ்சும் இன்பத் தமிழுக்கு, உன் குழந்தைகளிடம் நீ கொட்டும் பாசத்தமிழுக்கு இன்று ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆபத்தினைப் போக்குவதற்கு உன் உயிர் கொடுத்தேனும் போராடுவதற்கு நீ தயாரா? அதில் எனக்குச் சந்தேகமேயில்லை: விடுதலை உணர்ச்சிமிக்க நீ நிச்சயம் போராட்டத்திற்குத் தயாராகத்தான் இருப்பாய். ஆனால், நீ ஒருவன் மட்டும் தயாராகஇருந்துபயனில்லை; முஸ்லிம் சமூகம் முழுவதும் தயாராகவேண்டும்.

இங்கு நாம் நடாத்தப் போகும் விடுதலைப்போராட்டம் தனியே தமிழினம் மட்டும் நடாத்தும் போராட்டமாக இருக்கக்கூடாது; இந்த நாட்டிலே வாழும் தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் ஒருமித்த போராட்டமாக அது மலரவேண்டுமென நான் ஆசைப்படுகிறேன், தம்பி!

அதிலே உன் பங்குக்கு, அரசியல் வேறுபாடுகளால் இன்று பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்கும் முஸ்லிம் இனத்தை அணிதிரட்டித் தயார்படுத்தும் கடமையை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடிய சீக்கிரமே போர் முரசுகேட்கும். அப்பொழுது தமிழினம் களத்திலே குதித்திடும். அதே வேளையில் உன் தலைமையிலான முஸ்லீம்சமூகமும் களத்திலே இறங்கிட வேண்டும்.

எதிரணியிலே திரண்டு நிற்கும் ஆணவ வெறி கொண்ட அதிகார வர்க்கம் நமது இன ஒற்றுமையைக் கண்டு நடுநடுங்கிட வேண்டும்! "அடடா, சில சலுகைகளைக் காட்டி நம் கைக்குள் வைத்துக்கொண்டு விடலாம் என்று பார்த்தால் அந்த முஸ்லிம் இனம் எப்படியோ நம் உள் எண்ணத்தைப் புரிந்துகொண்டு தான் சேரவேண்டியவர்களுடன் அல்லவா போய்ச் சேர்ந்துகொண்டுவிட்டது. தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து விடக்கூடாது என்பதற்காக நாம் எத்தனை திட்டங்களைத் தீட்டினோம், எத்தனை தந்திரங்களைக் கையாண்டோம். கடைசியில்

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும், தமிழர்களுக்குத் தமது தாயகம் வேண்டும். அதை அவர்கள் ஆட்சி செய்யவேண்டும். இதையே தமிழர்களின் தலைவன் எனப் பெருமையோடு போற்றப்படும் அமரர் வன்னிய சிங்கம் குறிப்பிட்டார். அதற்காகப் போராடும் விடுதலை வீரர்களுக்கும், எமது தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடுதலை பெறுகின்ற காலத்தில் உரிமை பெற்ற காலத்தில் வாழ்ந்தோம் உழைத்தோம், பெற்றோம், என மனமகிழ தமிழர்களை தமிழ் நிலத்துக்கு, தமிழ் மண்ணின் சார்பாக அழைக்கின்றோம்.

## கொக்குவில் கூட்டணிக் கிளை

கொக்குவில் தமிழர் கூட்டணிக் கிளையொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நியாயவாதி சி. பொன்னையா அவர்கள் மங்கள விளக்கேற்றிவைக்க முன்னை நாள் மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா அவர்கள் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். இந்த வைபவத்தில் மட்டும் சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். அதைத்தொடர்ந்து கிளைக் குழுத் தெரிவு நடைபெற்றது.

பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வழக்கறிஞர் பொ. நவரத்தினம், உப தலைவர் சி. பொ. வேலாயுதபிள்ளை, காரியதரிசி: கு. அம்பிகைபாகன், தனாதிகாரி: செ. சத்தியானந்தன், போசகர்கள்: சி. பொ. வேலாயுதபிள்ளை, த. பொன்னம்பலம்.

15 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பேரவையின் எழுச்சிப் பேரணி!

# இன்பத் தமிழகம்காண சுயாட்சிப் போரணி!!

அன்பு நண்பா,

ஒரு தமிழன் தமிழர்க்காய் உயிர் வாழ்கின்றான்—உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகின்றான்' என்று எழுச்சிப் பண்ணிசைத்திட்ட புரட்சிக்கவிஞன், ஈழத்துத் தமிழ் இளைஞர்கள் துடித்தெழுந்து அடக்குமுறை ஆட்சியைக் கண்டித்தும் தங்கள் அன்புச் சகோதரரை—அன்னைத் தமிழின் காவலரை—செந்தமிழ் இளைஞர்களை—சிங்கள ஆட்சி சிறையிலடைத்து சித்திரவதை செய்வதை எதிர்த்தும்—இத்திங்கள் 20ம் நாள் யாழ் நகரிலே நடத்திக்காட்டிய பேரணியைக் கண்டிருந்தால், பொங்கியெழுந்து புதுக்கவிதை படைத்திருப்பான்—புல்லரித்துப் போயிருப்பான்—என்பதற்கு எள்ளளவும் அட்டியில்லை என்று நான் கூறிடுவேன்.

ஆம் நண்பா, இனத்தைக்காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கும் கீழோர்கள் வெளியினிலே சொகுசு வாழ்க்கை வாழ்ந்திட நாட்டுக்காக மொழிக்காக, இனத்துக்காக உழைத்திட்ட நல்லோர் பலர் சிறையிலே விசாரணை ஏதுமின்றி மாதக்கணக்காக வாடுவது கண்டு குமுறி எழுந்த தமது உணர்வுகளை ஆட்சியாளர்களுக்கும் அகில உலகுக்கும் எடுத்துக் காட்டிடுவதற்காக நம்முடைய தமிழ் இளைஞர்கள்—நமது இனத்தின் நாடிநரம்புகள்—பிரமாண்டமான ஊர்வலமொன்றை நடத்திக் காட்டியிருக்கிறார்கள் சென்ற ஞாயிற்றுக் கிழமை!

எத்தனை எதிர்ப்புக்கள்—எத்தனை தடைகள்—எத்தனை தொல்லைகள்—அத்தனையையும் உடைத்தெறிந்து—முத்தனைய தமிழ் காக்கும் சத்தியப்போரில் ஈடுபட்டிருக்கின்ற நம்முடைய இளம் தலைமுறையினர்—இளைஞர் பேரவையினர்—இந்த ஊர்வலத்தை நடத்தியிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஊணுறக்கமின்றி, ஓய்வு ஒழிச்சலின்றி ஓடோடி உழைத்து, ஊர்வலத்தை வெற்றியாக்கிய இளைஞர்கள் இனத்தின் வாழ்த்துக்களுக்கு உரியவர்கள் என்பதில் எள்ளளவும் தடையில்லை.

தங்கள் கைகளை சங்கிலிகளால் பிணைத்துக் கொண்டு—வாய்களைக்கட்டி—மருதனுமடம் சந்தியிலிருந்து கட்டுப்பாட்டுடன் யாழ் நகர் நோக்கி அணிவகுத்து வந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட அந்த இளைஞர் ஊர்வலத்தைக் கண்டோர் கண்கலங்கியிருப்பர்; இதயம் படைத்தோர் துயரத்தில் தோய்ந்திருப்பர்!!

பொலிசும், இராணுவமும் கொண்டு வந்து குவிக்கப்படுகிறது; சட்டத்தை மீறுவோர் தயவு தாட்சண்ய மின்றிக் கைதுசெய்யப்படுவர்; என்றெல்லாம் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் நாளேடு ஒன்று ஊர்வலத்துக்கு முதல்நாள் பயமுறுத்தியிருந்த போதிலும்—எதற்கும் அஞ்சாத ஏறுகளாய்—பொலிஸ் தாக்கினாலும் அதைத்தாங்குவதற்கு தயாரானவர்களாய்—படை பலவரினும், தடை பல நேரினும்—நடைபவனியை நடத்தியே தீருவோம் என்கின்ற வச்சிர உள்ளத்துடன், பொலிசாரின் அனுமதி பெறுமலே நடைபெற்ற அந்த ஊர்வலத்தில் வந்து கலந்து கொண்ட ஆயிரமாயிரம் தங்கத்தமிழ் இளைஞர்களின் உறுதியை என்ன சொல்லிப் பாராட்டுவேன்?

'கொடியரசே! சிங்களக்குடியரசே! எம்மை கொத்தடிமை கொள்ள எண்ணும் உன் குரூர எண்ணம் ஒருபோதும் பலிக்காது; நம்மவரை—நம் சகோதரர் சிலரை—நம் இனத்தின் மீட்சிக்காய் உழைத்திட்ட நல்லோர் சிலரை—காரண மேதுமின்றி அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிடித்து சிறையிட்டு விடுவதால் செந்தமிழர் விடுதலை இயக்கம் முடிந்து போகாது; முனை முறிந்து போகாது; திசைமாறிச் செல்லாது; இனத்தின் சுதந்திரத்தை மீட்கும் வரை விடுதலைப் போராடம் தொடரும்; மாறி மாறி இளைஞர் அணி விடுதலை இயக்கத்தை தொடர்ச்சியாக நடத்தி வரும்; என்று தப்புக்கணக்கு போட்ட ஆட்சியாளர்களுக்கு முறையாக எடுத்துக்காட்டிவிட்டனர்—தமிழ் இளைஞர் பேரவையின் துடிப்புமிகு காளையர்!

முன்னும் பின்னும் நிமிடத்திற்கொரு முறை துப்பாக்கி ஏந்திய பொலிசார், ஜீப்புக்களிலும், டிறக்குகளிலும் சுற்றித்திரிந்திட அது கண்டும், அச்சம் என்பது அணுவளவுமின்றி திருமதி அமிர்தலிங்கம் தலைமையில் தாய்க்குலம் முன்னே சென்றிட அதைத்தொடர்ந்து நாவலர் அமிர்தலிங்கமும், உடுப்பிட்டி சிவாவும் மற்றும் கூட்டணித்தலைவர்களும் வழிகாட்டிகளாக வந்திட—அதன் பின்னே, காண்டீபன், சிவதாசன், புஷ்பராஜா போன்ற இளைஞர்கள் தங்கள் கைகளை சங்கிலிகளால் பிணைத்தபடி வாய்கட்டியபடி தலைமை தாங்கி வர—எஃகு நெஞ்சம் கொண்ட எம் மினத்துக்காளையர், 'சமஉரிமை இன்றேல் தனிநாடு, 'எழுத்து பேச்சு சுதந்திரத்தைப் பறிக்காதே' 'உரிமை கேட்போரை சிறையில் தள்ளாதே,' காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தனை விடுதலைசெய்' தரப்படுத்தல் என்று கூறி தமிழன் உரிமையைப் பறிக்காதே' என்பது போன்ற எழுச்சிக்கோஷங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை கைகளில் தாங்கியபடி அணிவகுத்து வர—வழி வழியே இதைப் பார்த்து நின்ற பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உருகிக்கண்ணீர் வடித்திட்ட அந்தக் காட்சியை எப்படி எடுத்துரைப்பேன்?

என்னதான் செய்தென்ன? எப்படித்தான் அமைதியான முறையில்—சனநாயக நெறியில் நின்று எதிர்ப்பைக் காட்டியென்ன—ஊர்வலத்தை நடத்தியென்ன? கோளாக்காதினராக—சர்வாதிகார வெறி கொண்டவர்களாக—ஜனநாயகத்தின் விரோதிகளாக—காட்சிதரும் சிங்கள ஆட்சியாளரின் செவிகளில் இஃதொன்றும் ஏருதே: இவற்ருல் எல்லாம் பயன் விளையுமா என்ற கேள்வியையும் சிலர் கேட்கத்தான் செய்கிருர்கள்—இக்கேள்வியின் அர்த்தம் இல்லாமலுமில்லை:

இத்தகைய அமைதியான கண்டன ஊர்வலங்களும் கிளர்ச்சிகளும் மனச்சாட்சியற்ற இன்றைய ஆட்சியாளர்களின் செவிகளில் விழாவிட்டாலும், உலக நாடுகளின் கண்களில் நிச்சயம் படவே செய்யும்—ஜனநாயக உள்ளம் கொண்டோர் இதுபற்றிச் சிந்தித்திடவே செய்வர்; ஈழத்தில் தமிழினம் நசுக்கப்படுகிறது: அழிக்கப்படுகிறது; உரிமை கேட்ட தமிழ் இளைஞர்கள் சிறைகளில் காரணமின்றி தள்ளப்பட்டு ஆண்டுக்கணக்காக சித்திரவதைப்படுத்தப்படுகிருர்கள் என்கின்ற உண்மை வெளிநாடுகளுக்குத் தெரிவதற்கு இவை நிச்சயம் பயன்படவே செய்யும்!

## அரசியல் அரங்கம்

ஆனல் ஏகாதிபத்திய வெறிபிடித்த சிங்கள ஆட்சியிடம் இனியும் நீதியைக் கோரிப்பெற முடியாது; நியாயத்தை நிலைநாட்ட முடியாது; மகஜர் அனுப்புவதாலோ, அமைதியாக சனநாயக வழியில் நின்று கிளர்ச்சி செய்வதாலோ தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை வென்றெடுத்திட முடியாது என்பதை தெளிவாக உணர்ந்துவிட்ட காரணத்தினல்தான் தமிழர் கூட்டணியும் 17-5-73ல் கூடிய அதன் நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் ஓர் தெளிவான, திட்டவட்டமான முடிவுக்கு வந்திருக்கிறது!

ஆம், கடந்த ஓராண்டாக, தமிழினத்தின் சார்பில் ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்து புதிய அரசியல் திட்டம் திருத்தப்படவேண்டும் என்று அமைதியான வழியில் போராடிவந்த ஈழத் தமிழ் மக்கள், ஆட்சியாளர்களின் அகம்பாவம்பிடித்த ஆணவப் போக்கினல்—அலட்சியப் போக்கினல்—இன்று வேறு வழியில்லையென்ற நிலையில் இறுதி முடிவுக்கு தள்ளப்பட்டிருக்கிருர்கள்!

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ் ஈழத்தில், சுயாட்சி அரசொன்றை (Self Rule Government) நிறுவுவதொன்றின் மூலமே தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் பாதுகாத்திடமுடியும் என்று திட்டவட்டமாக தீர்மான வடிவில் தமிழர் கூட்டணி முடிவு எடுத்து விட்டது! இதுகாலவரை தமிழினத்தின் அடிமனதில் இருந்து வந்த அபிலாஷைக்கு தமிழர் கூட்டணியின் இத்தீர்மானம் வடிவம் கொடுத்துவிட்டது! உயிர் கொடுத்து விட்டது!

சுயாட்சித் தீர்மானத்தை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு, ஓர் ஒழுங்குமுறை கருதி, கூட்டணியிலுள்ள அரசியற்கட்சிகளின் ஆலோசனைக்கு தனித்தனியே விடுத்திருந்தாலும், கூட்டணியிலுள்ள தமிழ் காங்கிரசும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் தமிழ் காங்கிரசும் இத்தீர்மானத்தை அப்படியே ஏற்கும் என்று தமிழினம்—குறிப்பாக தமிழ் இளைஞர்கள் எதிர்பார்த்து நிற்கிருர்கள்!

தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை, இத்தீர்மானத்தை ஏற்பதில் கஷ்டம் ஏதுமில்லை. ஏனெனில் தமிழரசுக்கட்சியின் இலட்சியமே 1972ம் ஆண்டு தை மாதத்தில் நடைபெற்ற ... தமிழ்ஈழ சுயாட்சியாகவே இருந்துவருகிறது. தமிழ் காங்கிரஸ் தலைவர்களான உடுப்பிட்டி சிவா, ஆனந்தசங்கரி போன்றவர்களும், அண்மைக் காலமாக சுயாட்சி இலட்சியத்தை ஆதரித்து தமிழர் கூட்டணி மேடைகள்தோறும் முழங்கி வருவதை நாட்டு மக்கள் அறிவார்கள். இந்நிலையில் தமிழ் இனத்துக்கு தமிழ் ஈழம் உருவாக்கவேண்டும் என்ற கருத்துக்கு தலைவர் தொண்டமான் முரணாக இருப்பார் என்று அவரோடு நெருங்கிப் பழகியவர்கள்—அவரது இதயத்தில் கனன்றுகொண்டிருக்கும் சுதந்திர உணர்வை புரிந்துகொண்டிருப்பவர்கள்—ஒருபோதுமே கூறமாட்டார்கள்!

ஆனல் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை மீட்பதென்பது இலேசான காரியமல்ல—தமிழினம் முழு அளவில் தமிழர் கூட்டணியின் பின்னல் முதலில் ஒன்றுபடவேண்டும். நம்மை நாமே பூரணமாக அந்த இலட்சியத்துக்காக ஒப்படைத்திடவேண்டும். கிராமம் கிராமமாக இந்த இலட்சியத்தை எடுத்துச்சென்று மக்களுக்கு விளக்கிடவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழினம் இந்நாட்டை ஆண்ட இனம்—ஆளப்பிறந்த இனம்—ஆளவேண்டிய இனம்—அடிமைகளாக அழியவேண்டிய இனமல்ல—என்ற வைராக்கியத்தை ஒவ்வொரு தமிழனின் நெஞ்சிலும் ஊன்றிப்பதிய வைத்திடவேண்டும்!

ஆம், தமிழினம் சென்றடைய வேண்டிய இலட்சியபூமி இதுதான் என்பது இப்போது தெளிவாக்கப்பட்டுவிட்டது. தமிழினத்தின் சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் நிலைநாட்டுவதற்கு தமிழர் பூமியில் தமிழ் சுயாட்சிக்குடியரசை நிலைநாட்டுவதொன்றே ஒரே வழியென்பது நிச்சயமாகிவிட்டது! இனி, காலமறிந்து-இடம் பொருள் ஏவல் அறிந்து—வினைவலியும் தன்வலியும் மாற்ருன் வலியும் துணைவலியும் தூக்கிசெயல்பட்டு, நமது இனத்தின் மீட்சியைக்காண இலட்சியப்பாதையில் வேகமாக நடைபோட வேண்டியதுதான்!

தமிழினத்தின் விடுதலைக் கோரிக்கையையும் தமிழீழம் அமைத்திடவேண்டுமென்பதில் கொண்டுள்ள அசையாத உறுதியையும் நிலைநாட்டும் வகையில்தான் தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியிலும், தமிழர் கூட்டணியின் தலைமையில்தமிழ்மக்கள் பெருவாரியாக தமிழ் ஈழம்வாழ்க என்ற முழக்கத்துடன் தமிழ்த்தாயின் மணிக்கொடியை—தமிழினத்தின் தன்மானக்கொடியை உதயசூரியன் கொடியை இத்திங்கள் 22ம் நாள் தமிழ்த்தேசிய கீதம் முழங்க ஏற்றி வைத்துள்ளனர்!

ஆம், சிங்கள நாடு தான் குடியரசுபெற்ற மே 22ம் நாளில் தனது தேசியக்கொடியாகிய சிங்கக் கொடியை உயர்த்திய அதே வேளையில் தமிழ்ஈழ மக்கள் தங்கள் சுதந்திர சுயாட்சிக் கொடியாகிய உதயசூரியன்கொடியை 'வாழ்க ஈழத்தமிழகம்' எனும் நாட்டுப்பண் முழங்கிட ஊரெங்கும் ஏற்றி வைத்து அந்தக் கொடியின் மீது ஆணையிட்டு, ஈழத்தமிழ் நாட்டின் சுதந்திரக்கொடியாக அதனை என்றே ஒரு நாள் ஆக்கியே தீருவோம் என்று உறுதியெடுத்திருக்கிருர்கள்! உதயசூரியன் கொடியல்லாத வேறு எந்தக் கொடிக்கும் தலைசாய்ப்பதில்லை என்றும் ஈழத்தமிழினம் உறுதியெடுத்துள்ளது.

விடுதலைபெற்ற தமிழ் ஈழம் காணும் போராட்டத்தினைத்துரிதப்படுத்துவோம்—தமிழ்த்தாயின் அடிமை விலங்கை நொருக்கியே தீருவோம்!

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்


### வேண்டத்தகாதவை

'துர்குணமுள்ள மனைவியையும், கெட்ட நண்பனையும் தலைக்கனமுள்ள வேலைக்காரனையும், வைத்துக்கொள்வது விஷப்பாம்பு திரியும் வீட்டில் வாழ்வதற்கு சமமாகும்.'

—ஆன்றோர் மொழி.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் தாயின் தவப் பேறு

தமிழன்னையின் தவப் பேருக விளங்கினர் காலஞ் சென்ற திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் அவர்கள்:

பொறுமையின் திருவுருவாய் அன்பின் உறைவிடமாய், தமிழ்ப் பண்பின் சிகரமாய் விளங்கிய அன்னார் தமிழ்த்தலைவர்கள் எடுத்துப் போராடிய போராட்டங்கள் அத்தனையிலும் கலந்து கொண்டார். ஆனால் அத்தனையிலும் அன்னாரை ஏனையோருக்குப் புரிய வைத்தது 1961ம் ஆண்டு நடந்த சத்தியாக்கிரகப் போராட்டமே. கச்சேரி மறியலில் இரவும் பகலும் தன் உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டார். தமிழரசு மாதர் முன்னணியின் உப தலைவியாக விளங்கிய இவரது சாந்தமான போக்கு தந்தை செல்வாவையே மதிப்பளிக்க வைத்தது.

சத்தியாக்கிரகத்தை அரசாங்கம் முறியடிக்க கடைசி நாள் ராணுவம் வந்து எங்களைக் கைது செய்த போது என்னோடு இருந்த ஏனைய பெண்களுக்கு என்ன நேருமோ என ஏங்கிக்கொண்டிருந்த நேரத்திலே நான் பார்த்துக்கொள்கிறேன் போய் வா பிள்ளை' என மனத் தைரியம் கூறி அனுப்பியதை என்னால் மறக்கவே முடியாது. ஒவ்வொரு பெண்ணையும் பாது காப்போடு வீடு கொண்டுபோய்சேர்த்த பெருமை திருமதி. வைத்திலிங்கம் அவர்களையே சாரும்.

பனகொட ராணுவ முகாமுக்கு எல்லாக் காவல்களையும் துணிவுடன் மீறி வந்து மனந் தளரக் கைகூப்பி நின்ற காட்சியை மறக்க முடியாது. தலைவர்களும், காவலரும் வியந்து நின்றனர்.

தான் செய்த தொண்டின் பயனாகத் தன் அருமை மகளுக்கும் ஓர் சிறந்த அரசியல் வாதியும், நேர்மையாளனும், பணிவான ஊழியனுமான ஓர் மருமகனைத் தேடி வாழ வைத்தார்.

தன் அருமைக் கணவரோடு மலாயா நகரில் இருந்து தமிழும், ஆங்கிலமும் புலமை பெற்று விளங்கிய அன்னார், கணவரை இழந்து ஈழ நாட்டிற்கு வந்தும் தமிழ் தாயின் துயர் துடைக்க மறந்தாரில்லை.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்பது திருமறை தந்த வள்ளுவர் வாக்கு.

நாம் யாரை அதிகமாக நேசிக்கின்ருேமோ அவர்களையே ஆண்டவனும் விரும்பி அழைத்துக்கொள்கிருன். அவர் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர்க்கு எங்கள் அனுதாபங்கள். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி, அவர் விரும்பி ஈடுபட்ட பணியை நாமும் தொடர்ந்து இயற்றி வெற்றி பெறுவோமாக.

மங்கையர்க்கரசி
அமிர்தலிங்கம்.

# மக்களுக்குக் காணி வழங்க மாமேதை லெனின் என்ன செய்தார்?

## அவர் வழியைக் கம்யூனிஸ்டுகள் பின்பற்றுவார்களா?

நில உச்ச வரம்புச்சட்டம் மக்களுக்கு ஏதோ வாரி வழங்கி[illegible]ட்டதாயும் - இலங்கை சோசலிசப் பாதையில் அடியெடுத்துவைக்கிறதுஎன்பதற்கு இது நல்ல அறிகுறி என்றும், சோசலிசத்தின் தூவானம் என்றும் கம்யூனிஸ்டுகள் வாய்கிழியக்கத்துகிருர்கள்.

இவர்கள் கண்டம் புண்படக் கத்தும் இந்த நிலவுச்ச வரம்புச் சட்டத்தையும்-கம்யூனிஸ்டுகள் பங்கு வைத்திருக்கும் சிங்கள அரசின் காணிக் கொள்கையையும் விமர்சிப்பது அவசியமாகிறது.

முதலில் இந்த நிலவுச்ச வரம்புச் சட்டத்தை எடுத்து நோக்கலாம். இச்சட்டம் ஒருவர் ஐம்பது ஏக்கர் காணிக்குமேல் வைத்திருக்கக்கூடாது என்று தடைவிதிக்கின்றது. ஆனால் ஐம்பது ஏக்கருக்குமேல் உள்ள காணிகளை அரசாங்கம் பணம் கொடுத்து வாங்கும். அத்துடன் கம்பனிகளாக உள்ள தோட்டங்களுக்கு காணி உச்சவரம்பு விதிவிலக்கு அளிக்கிறது.

அதாவது கம்பனிகளுக்கு ஐம்பது ஏக்கர்தான் வைத்திருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடோ-வேறெந்த உச்சவரம்போ கிடையாது. ஆமாம் கம்யூனிஸ்டுகள் பெரிதுபடுத்திப் பேசும் நிலவுச்சவரம்புச் சட்டத்தின் மூலம் — அத்திவாரம் - இது தான்.

இச்சட்டத்தால் மக்கள் நன்மை அடைந்தார்களா? காணி வைத்திருக்கும்-நிலப் பிரபுக்களே இலாபம் அடைவார்கள். உதாரணமாகப் பிரதமர் சிறிமாவோவை எடுத்துக்கொண்டால் அவர் ஆயிரக்கணக்கில் காணி வைத்திருக்கும் ஒரு நிலப்பிரபு. அவருக்கும் பத்திரிகையில் 'ஐம்பது ஏக்கரை வைத்துக்கொண்டு மிகுதியை அரசாங்கத்திடம் கொடுக்கப்போகின்ருர்' என்று பெரிதுபடுத்தி விளம்பரம் செய்தன.

ஐம்பது ஏக்கரையும் எப்படிக் கொடுப்பார் என்று விளம்பரப்படுத்தவில்லை. இலவசமாக கொடுப்பாரா? அன்றேல் பணத்திற்குக் கொடுப்பாரா?

ஆம்! இரண்டு கொத்து அரிசி தருவோம்! என்ருர்களே! அதுபோலத்தான். இலவசமாகத் தருவார்கள் என்று மக்கள் நினைத்திருப்பார்கள். மக்களை ஏமாற்றும் தந்திரம் இது!

சிறிமாவோ வைத்திருக்கும்-மற்ற மந்திரிகள் வைத்திருக்கும் - காணிகளை எல்லாம் காசுக்கே அரசாங்கம் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம் யார் கையில்? இவர்கள் விலை தீர்க்கும்போது எப்படித் தீர்ப்பார்கள். காட்டுக் காணியையும் சேர்த்து நல்ல காசுக்கு அரசாங்கம் வாங்கலாம். இதன் பின்னர் அமைச்சர்களையோ-அன்றிச் சிறிமாவையோ நிமிர்ந்து கூடப்பார்க்கமுடியும் என்பது சந்தேகமே!

ஆமாம் காட்டுக்காணிகளைக் காசுக்கு வாங்குவது தான் இன்றைய நிலப்பிரபுத்துவ ஆட்சியாளரின் சோசலிசத் தூவானம். இவர்கள் நில ஏகாதிபத்தியத்தை ஒழிக்கின்ருேம் என்று கூறிப் பண ஏகாதிபத்தியத்தை வளர்க்கிருர்கள். இவர்கள் விரும்பினல் அரசாங்கத்திற்குக் காசுக்குக் கொடுக்கலாம். அல்லது கம்பனிகள் ஆக்கலாம். இதனல் அமைச்சர்கள் தங்கள் மாமாவையும், மச்சானையும், மருமகனையும், பிள்ளைகுட்டிகளையும், மற்றும் நெருங்கிய உறவினர்களையும் அழைத்து தம்மிடம் இருக்கும் நிலத்தை-நிலப்பிரபுத்துவத்தைப் பாதுகாக்க கம்பனிகள் ஆக்கவும் வாய்ப்பு உண்டு.

இதற்காகத்தான் தமிழரசுக்கட்சி தயாரித்த சமஷ்டி அரசியல் திட்டத்திலேயே நில உச்சவரம்புடன் (மிகக் குறைந்த) காணிகளைச் சுவீகரிக்கும்! திட்டத்தையும் சேர்த்திருந்தது. அத்துடன் நில உச்சவரம்புச் சட்டம் பாராளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டபோது கம்பனிகளுக்கு விதிவிலக்கு இருக்கக்கூடாது என்று சி. கதிரவேற்பிள்ளை பா. உ. வாதாடினர். தமிழரசுக்கட்சியின் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டது.

'நீங்கள் உவ்வாறு எதையும் கூறலாம் ஆனல் பாதிக்கப்படுவது நாம்தான்' என்று அரசாங்கப் பக்கத்திலிருந்து பதிலும் கிடைத்தது. ஆம்! நில உச்சவரம்புச் சட்டத்தின் உண்மை நிலை இப்பொழுது தெரிந்துவிட்டது.

கம்யூனிஸ்டுகள் ஏன் இவ்வாறு மக்களை ஏமாற்றுகிருர்கள்? மக்களை மட்டுமா?— மாமேதை லெனினை —இலங்கையைக் கம்யூனிசப் பாதையிலே இழுத்துச் செல்கின்ருேம் என்று மாஸ்சோவையும் ஏமாற்றுகின்ருர்கள்.

ஆமாம் - கம்யூனிஸ்டுகள் தம் குரு என்று தம்பட்டம் அடிக்கும் மாமேதை லெனினையே ஏமாற்றுகிருர்கள்.

### லெனின் காட்டிய பாதை

மாமேதை லெனின் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் என்ன செய்தார் என்பதை வெ. சாமிநாதசர்மா எழுதிய 'ரஸ்சியாவின் வரலாறு' என்ற புத்தகத்தில் பக்கம் 229 இல் பார்க்குக.

அதில், "விவசாயிகளின் ஆக்கிரமிப்புச் செயலைக் கண்டிப்பதால் மட்டும் ஏதேனும் நன்மையுண்டாகுமா? இதனல்தான் லெனின், புத்திசாலித்தனமாக தேசத்தில் உள்ள நிலமனைத்தையும் சனங்களுக்குச் சொத்தாக்கிவிட்டான். ஜார் அரசனுக்கும், அவனுடைய குடும்பத்தினருக்கும், மத ஸ்தாபனங்களுக்கும் சொந்தமாய் இருந்த எல்லாச்சொத்துக்களும் பங்கிடப்பெற்று விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பெற்றன. இந்த விநியோக வேலையை யார்செய்தது. அந்தக் கிராமக் கமிட்டிகளோ அந்தக் கிராம விவசாயிகளால்தெரிந்தெடுக்கப்பட்டவை. விவசாய சம்பந்தமான பரிசோதனைகளை நடத்துவதற்காக மட்டும் முக்கியமான இடங்களில் சில நிலங்களை அரசாங்கமானது தனக்கென்று வைத்துக்கொண்டது. ஆனல் இவைகளைக் கூட விவசாயிகள் சிறிது காலங் கழிந்து தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டு விட்டார்கள். 'நிலத்தேவை அவ்வளவு அதிகமாய் இருந்தது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சோவியத் வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டிய வாக்கியங்கள்தான் இவை.

லெனின் காட்டிய பாதையும் — லெனின்தான் எமது குரு என்று கூறி ஏமாற்றும் இலங்கைக் கம்யூனிஸ்டுகள் அங்கம் வகிக்கும் சிங்கள அரசு செய்யும் செயலையும் விமர்சிப்போம்:

லெனின் காணிகளை மக்களுடமை ஆக்கினர். அங்கு அரச காணிகளில் கூட விவசாயிகள் குடியேறினர். ஒவ்வொரு சுயாட்சி பெற்ற குட்டிக் குட்டி சமஷ்டி அமைப்புகளையே உருவாக்கி அவற்றிடம் காணிகளை பங்கிட அதிகாரம் வழங்கினர். இதன் மூலம் தேசிய இனங்களின் பாரம் பரிய பிரதேசம் காப்பாற்றப்பட வழிதிறக்கப்பட்டது. ஒரு இனம் தமது கலை கலாசாரத்தை இழக்காது பலமுடன் வாழப் பிரதேசம் காக்கப்பட்டது.

ஆனல் இலங்கையில் நடப்பது என்ன? வளமான காணிகள் எல்லாம் அரசாங்கத்திற்கே சொந்தம். அவற்றில் தமிழ் மக்கள் குடியேற முடியாது. குடியேறிப் பயிர் செய்த விவசாயிகள் தாக்கப்பட்டு பயிர்கள் பிடுங்கி எறியப் படுகின்றன—இன்றைய அரசாங்கத்தால் தனியாருடைய தரிசுக் காணிகளில் கூடக்குடியேறும் தமிழ் விவசாயிகள் விரட்டப்பட்டு முப்படை ஆதரவுடன் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. கிழக்கு மாகாணத்தில்

கிழக்கு மாகாணத்தைச் சிங்கள ஏகாதிபத்தியம் விழுங்க இன்னும் பல நாட்காத்திருக்கவேண்டியதில்லை.

தோட்டங்கள் தேசியமயம் என்றபோர்வையில் தமிழ் தோட்டத்தொழிலாளிகள் விரட்டப்படுகிருர்கள். அவர்கள், வடகிழக்கில் குடியேற விடாமல் அரசாங்கம் — கம்யூனிஸ்டுகள் பங்குவைத்திருக்கும் அரசாங்கம் — விரட்டுகிறது. சித்திரவதை செய்கிறது. அத்துடன் நாம் சோசலிச அமைப்பைக்கட்டியெழுப்புகின்ருேம் என்று பேசுகிருர்கள் அமைச்சர்கள். அவர்கள் கட்டியெழுப்புவது சோசலிச அமைப்பேயல்ல —சிங்கள சோசலிச அமைப்பும் அல்ல — சிங்களச் சர்வாதிகார அமைப்புத்தான்:

இந்தக் கட்டட வேலைக்குக் கல்லுத்தூக்கிக் கொடுக்கிருர்கள் கம்யூனிஸ்டுகள்: இது சோசலிசத்தின் தூவானம் என்று பேசுகிருர் தோழர் வ. பொன்னம்பலம்.

புளுகர் பொன்னம்பலத்திற்கு நாம் லெனின் கொள்கையைப்படிப்பிக்கும் காலம் வந்து விட்டது. இவர்கள் லெனின் கொள்கைப்படி நடப்பார்களேயானல் நாம் இவர்களைப் போற்றுவோம்! ஆம் தோழர்களே!

## காசி ஆனந்தன் எச்சரிக்கை!

— திருக்கோணமலைக் கவிராயர் —

என்னைச் சிறைப்பிடித்தீர்
என்ன பலன் கண்டுவிட்டீர்?"
பின்னை ஏன் என்னைப்
பெரிதாய்க் கருதுகிறீர்?
அன்னை தமிழ்த் தாய்க்கு
அழகுமலர்ப் பா சொரிந்து
என்னையே அர்ப்பணிக்கும்
எண்ணம் பிறந்ததனல்......
என்னைச் சிறையடைத்தீர்;
ஏது பலன் கண்டுவிட்டீர்?
பின்னை ஏன் என்னைப்
பெரிதாய்க் கருதுகிறீர்?
இன்னும் சில நாளா?!
இதுதான் நிரந்தரமா?!!
என்று விடுவீர்கள்?
அன்று அறிவீர்கள்!

* * *

என்னை விடுங்கள்
என் தலை மேல் பணியுளது...
என்றன் உயிர்த் தாயார்
என்னை அழைக்கின்ருள்

அண்ணன் நடந்த
அழகுமிகு பாதையிலே...
பின்னே நடந்து
பெருந் தொண்டு செய்வதற்காய்
என்னை விடுங்கள்
என் தலைமேல் பணியுளது.

திண்ணம் இது திண்ணம்
தீந்தமிழ்த்தாய் வீறுபெற்று
முன்னம் நடப்பாள்''
மூடர்களே காத்திருங்கள்
சன்னதமாய் ஆடிவரும்
சமர்க்களத்து வாலிபரை,
உன்னதமாய் வாழ்த்த
உடனே திறந்த விடு!

என்னை விடுங்களடி
என் தலை மேல் பணியுளது:

வெலிக்கடையுள்ளே வேங்கை
வெறிக்கனலாகும், வந்தால்
எலிக்கிளை ஒழியும், எங்கள்
புலிக்கிளை கொடியை நாட்டும்
மொழிக்கொடி உயரும் அங்கே
களிப்பொடு எனது பாடல்
[illegible]கேட்கும் தூய
மணிக்கொடி மலரும் கண்டீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (10)

'வாழ்க்கை எப்பொழுதுமே வசந்த காலமாக இருக்க வேண்டும் என்று விரும்புவான் யோகி. ஆனல் அவன் விருப்பம் போல வாழ்க்கை அமைவதில்லை. திருப்தியுள்ள மனம் இருப்பவனுக்கு வாழ்க்கை என்றும் வசந்த காலமாக இருக்கின்றது. அதே போன்று ஒரு பரிபக்குவ நிலையில் மனதைத் தன்னிலைப் படுத்தி வைத்திருந்தான் வாசுதேவன். துன்பத்தின் அழுத்தலுக்கோ, இன்பத்தின் இழப்புக்கோ தன்னை ஆளாக்கிக் கொள்ளாது, 'நன்றும் தீதும் பிறர் தர வாரா!' என்ற கோட்பாட்டின் எல்லையில் பிரயாணம் செய்பவன். அதன் காரணமாக ராதாலட்சுமி மயங்கிச் சாய்ந்ததும் அவளை விலக்கி விட்டுத் திரும்பினன்.

ஆனல் ராதாலட்சுமி அவனை விடவில்லை. அவன் தோளைப்பற்றி 'வாசு' என்ருள். வாசு அசையவில்லை.

'என்ன ராதா' என்ருன்.

'வாசு! எனக்கு என்ன செய்வதென்றேபுரியவில்லை. என்னைப் புரிந்து கொண்டும் நீங்கள் இப்படி என்னை உதறுவது சரியா? நியாயமா? இதுவரை நான் என் கருத்தை வெளியிட முடியாது தவித்தேன். உண்மையில் ஆரம்பத்தில் என்னிடம் குடிகொண்டிருந்த அகம்பாவம் என் கருத்தைத் தெரிவிக்க அனுமதிக்கவில்லை. இன்று எந்நிலை தெரிந்துவிட்டதே. வாசு! எனக்குப் பொன் வேண்டாம். பொருள் பணம் வேண்டாம். உங்கள் அன்பும் ஆதரவும் கிடைத்தால் அதுவே போதும்—வாசு,' அவள் கதறினுள். அவன் கழுத்தையும் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

'ராதா! இந்த உலகனைத்தையும் ஒரு புறமாயும் உன்னை மறுபுறமாயும் வைத்துக்கொண்டு எதுவேண்டும் என்று என்னிடம் கேட்டால் நான் உன்னைத் தான் கேட்பேன். நீ துன்பத்தை விலை கொடுத்து வாங்குவோம் என்கிருய். நான் துன்பத்தைக் கண்டு அஞ்சுபவனல்ல ஆனல் ராதா! துன்பமே இனதென்று தெரியாமல் வளர்ந்துவிட்ட நீ... துன்பப்பட என்ருல் அதைச் சகித்துக் கொள்ள முடியுமா? சொல் ராதா. சொல்.' அவளுடைய தோள்களைப் பற்றிக் குலுக்கினன். அவனுடைய ஸ்பரிசம் அவள் உடலில் ஓர் புத்துணர்வைத் தூண்டி விட உள்ளமெல்லாம் இனம் புரியாத ஓர் இன்பத்தவிப்பில் சூடாடியது.

'என்ன ராதா நான் பல முறை கேட்டுவிட்டேன். நீ பேசாமல் நின்ருல் முடிவு தான் என்ன?'

'வாசு! எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. நீங்கள் கூறுவது யாவும் ஒப்புக் கொள்ளக் கூடியவையாக இருக்கும் பொழுது வேறு பேச்சுக்கு இடமில்லையே. ஆனல் ஆயிரமாயிரம் எண்ணங்களைக் கொட்டி வைத்துவிட்டு சொல்ல முடியாத வேதனை உணர்வுகளோடு போராடிக் கொண்டிருக்கின்றேனே! நிறைவேற முடியாத ஆசைகள் நினைவுகளிப்போடு மடியவேண்டியதுதானு?'

'ராதா! ஆசைப்படுவது தவறில்லை; அதை அடைய முயல்வதுதான் சிந்தித்து இறங்கவேண்டிய விடயம். அடைய முடியாத ஒன்றை நினைத்து மகிழ்வதைத் தவிர வேறு வழியில்லையே.'

'இது தான் உங்களுடைய முடிவா?'

'என் முடிவல்ல ராதா. உன்னைமக்கு, மதிப்பளிப்பவனுடைய முடிவுகள் பெரும்பாலும் இப்படித்தானிருக்கும்.'

'வாசு'

'ம்'

'நான் உங்களைத் தொட்டுப் பழகுவதில்தவறில்லையே வாசு.'

'அது பற்றி முடிவு செய்ய வேண்டியவன் நானல்ல ராதா. நீர்தான். காரணம் எமது பண்பாடு, பழக்க வழக்கங்கள் பற்றி எத்தனையோ முறைகள், தடைகள் இருக்கே. பழமை போற்றும் பண்புடமை எம்முடையது. இல்லையா ராதா?'

'இல்லை என்று நான் சொல்லவில்லையே வாசு ஆனல் காலத்தின் போக்கில் எமது கலாச்சாரமும் புதுமை பெறுகின்றது தானே. புதுமையை வரவேற்றுக் கொள்வதும் எமது பண்பாட்டின் மரபுதானே.'

'ராதா! புதிய மரபை நாம் தோற்றுவிப்பதில் தவறில்லை. ஆனல் அந்த மரபு பழமையைச் சிதறவிடாதிருக்க வேண்டும். அது மட்டுமல்ல பழமைக்கும் புதுமைக்குமிடையில் கண்டதே காட்சி கொண்டதேகோலம் என்றில்லாமல் ஏதாவது ஒன்றில் காலூன்றி நிற்பதுதான் பகுத்தறிவு பெற்ற மனித செயல்.'

'நீங்கள் பேசுவதற்கு எதிர்வாதமிட என்னல் முடியவில்லை வாசு. ஆனல் நான் வணங்கும் தெய்வத்தின் மீது ஆணையிட்டுச் சொல்லுகின்றேன். என் உள்ளத்தில் உங்களைத் தவிர வேறுயாருக்குமே இடமில்லை. நான் வாழ்ந்தாலும் சரி, இறந்தாலும் சரி உங்கள் நினைவுடன் தான் என் இதயம் இருக்கும் வாசு! ஐ லவ் யூ வாசு. ஐ லவ் யூ.' என்று அவன் மார்பில் முகம் புதைத்துக் குலுங்கினுள்.

அவனும் சில நிமிடங்கள் எதுவுமே பேசவில்லை. அவள் விருப்பத்தை நிராகரிக்கவோ அன்றி ஏற்கவோ முடியாத நிலையில் மெளனமே உருவாக நின்றிருந்தான்.

விஞடிகள் நிமிடங்களாகின. வெளியே மழை பேரிரைச்சலுடன் கொட்டிக் கொண்டிருந்தது. அந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால் முடிவு எப்படியாகுமோ என அஞ்சிய வாசுதேவன், "ராதா" என்று அவன் மோவாயை நிமிர்த்தினன்.

'ம்'

'இப்போது, என்ன நாடகம் நடந்து கொண்டிருக்காம்.' என்று சிரித்தான்.

'இதுவா?ராதையின் நெஞ்சம் கண்ணனுக்குச் சொந்தம் என்ற நாடகம்' என்று அவளும் சிரித்தாள்.

'ராதா! நாடகம் வாழ்க்கையாகலாம். ஆனல் நிஜ வாழ்க்கை நாடகமாக மாறி விடக்கூடாது.'

'வாசு!' அவள் துடித்து நிமிர்ந்தாள்.

'என்ன ராதா பயப்படுகின்ருயா? ரசிகர்களைத் திருப்தி செய்வதற்காக எப்படியும் நாடகத்தின் முடிவை மாற்றலாம். நடிக்கலாம். ஆனல் வாழ்க்கையில் யாரைத் திருப்தி செய்வது? எப்படிச் செய்வது? யாரையுமே திருப்தி செய்ய முடியாத நிலை உருவாகலாம். இல்லையா? அதற்காகத் தான் கூறினேன்.' என்று கூறி விட்டு, அருகே கிடந்த சோபா ஒன்றில் உட்கார்ந்தான். அவள் நின்று கொண்டே அவனை உற்றுப் பார்த்தாள்.

'உட்கார் ராதா' என்று அவள் கரங்களைப் பற்றி உட்கார வைத்தான். அவளும் பனிப் பதுமையென அவனருகே அமர்ந்தாள்.

'ராதா! வாழ்க்கையில் மனிதன் தனக்காக மட்டும் வாழாமல் பிறருக்காகவும் இயன்றளவு வாழப் பழகனும். அப்படித்தான் வாழ வேண்டுமென்றில்லாதவன் ஒரு இலட்சியக் குறிக்கோளுடன் வாழவேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் எனக்கென்று சில இலட்சியக் கோட்பாடுகள் உண்டு. ராதா! உனது தூய்மையான இதயத்தின் அன்பைப் பெறும் அருகதை எனக்கு இருக்கோ இல்லையோ ஆனல் என்னை நீ நம்புமளவுக்கும் நேசிக்குமளவுக்கும் மேலாக



உன்னை நான் நம்புகின்றேன். நேசிக்கின்றேன். ஆனல் ராதா! என் குறிக்கோளை நிறைவு செய்யுமுன் உன்னை ஏற்று வாழ முடியாதவனுக இருக்கின்றேன். காதல் மனித வர்க்கத்துக்கு மட்டும் உண்டான உணர்வு அல்ல. ஆனல் அதன் சுதந்திர உணர்வுக்கு மனித சமுதாயத்தில் சில கட்டுக்கோப்புகள் இருக்கின்றன.'

'தெரியும் வாசு. ஆனல் என்னை உடனடியாகத் திருமணம் செய்யுங்கள் என்று கேட்கவில்லையே நான். என் காதலை அங்கீகரியுங்கள். நீங்கள் விரும்பித் திருமணம் செய்யும்வரை காத்திருக்கின்றேன்.'

'அதுமட்டுமில்லை ராதா. என் லட்சிய வெற்றிக்கு எமது காதல் முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல நான் ஏழையானுலும் சுய கெளரவத்துடன் வாழ விரும்புபவன்.'

'யாருக்குத் தான் சுய கெளரவமில்லை.'

'எல்லோரும் சுய கெளரவத்துடன் தான் வாழவேண்டும். அதே வேளையில் மற்றவர்களின் கெளரவத்தைப் பாதிக்காதிருக்க வேண்டும்.'

'வாசு! நீங்கள் எதை வேண்டுமானுலும் கூறுங்கள். ஆனல் ....'

'ராதா! திருமணம் சொர்க்கத்தில் நிட்சயம் செய்வதாகக் கூறுகின்ருர்கள். நாமாக ... நாமே துன்பத்தை ஏற்படுத்திக்கொள்ள நீ ஆசைப்படுகின்ருய். எதிலும் அவசரம் கூடாது ராதா.'

'வாசு இப்படி நீங்கள் கூறுவதை நான் எதிர்க்கின்றேன் என நினைக்காதீர்கள். விரும்பியதை அடைவதில் நான் அவசரப்படவில்லை. எனக்கென்று ஒன்று இந்த உலகில் தேவை என்ருல் அது... அது... நீங்கள் தான் வாசு.' என்று கூறியபடியே அவன் மடி மீது விழுந்தாள் ராதாலட்சுமி.

இயற்கையின் அற்புத லீலையினுல் ஏற்கெனவே இருளடைந்திருந்த அந்தப் பிரதேசம் இரவின் வருகையினுல் மேலும் இருளடைந்து விட்டது. அவர்கள் தம்மை மறந்து பேசிக்கொண்டிருந்தமையினுல் விளக்குப்போட வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை. அவன்மடி மீது அவள் முகம் புதைத்துக் கிடந்தபொழுது அவனை என்ன செய்வது என்று தெரியாமல் மெளனமாக இருந்தான் வாசுதேவன். அவளுடைய பட்டுக் கன்னத்தின் ஸ்பரிசம் அவன் உடலில் மட்டுமல்ல உள்ளத்திலும் லேசான ஒருவித ஈடாட்டத்தை உண்டுபண்ணவே செய்தது.

'ராதா' என்று அவன் முதுகில் கைவைத்தான்,

'ம்' என்று மட்டுமே முனகினுள்.

'ராதா!நெய்யினுல்நெருப்பணைக்க முடியாது. மனைவி, மக்கள், பொருள் யாவும் ஒருவனுக்கு நெய் போன்றவை. இவை மனிதனது துன்பத்துக்கு வழி வகுப்பவையேயன்றி இன்பத்துக்குரியனவல்ல. நான் கூறுபவை ஆழ்ந்த கருத்துக்கள் ராதா. மேலெழுந்தவாரியாகப் பார்க்கப்போனுல் மனிதன் இவற்றை துன்பம் அளிக்கும்போதைப்பொருள் என்று நினைக்கின்ருன். அவையே அவனுக்கு ...! ராதா! நான் உன்னை விரும்புகின்றேன். உன் கோரிக்கையை ஏற்கின்றேன்; ஆனல் தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டால் என் சொல்லை மீருது உன் வாழ்க்கைப் பாதையைக் கெடுத்துக்கொள்ளாது நடந்து கொள்வேன் என்று எனக்கு உறுதி தரவேண்டும்.'

'நீங்கள் என்ன கேட்கின்றீர்கள் வாசு?' எனத் திடீரென எழுந்திருந்து கேட்டாள் ராதா.

'ராதா! திருமணம் எங்களால் நிட்சயம் செய்யப்படுவதல்ல. திருமண அழைப்புக்களில் பார்த்திருப்பீரே. 'பெரியோர்களால் நிட்சயம் செய்யப்பெற்றது.' என்று போட்டிருப்பார்கள். அதனுல்தான் கூறுகின்றேன். நான் உன் உடலைமட்டும் காதலிக்கவில்லை. உன் உள்ளத்தையும், உணர்வுகளையும் தாங்கி நிற்கும் உடலையும் சேர்த்துத்தான் விரும்புகின்றேன்.

'உங்கள் கருத்து எனக்குப் புரிகின்றது வாசு. தற்செயலாக எமது எண்ணம் நிறைவேற முடியாத இடத்தில் நான்வேறுதிரு——அப்படித் தானே?'

'ஜேஸ் ஜேஸ்.'

'வாசு! நீங்களா இப்படிக் கூறுகின்றீர்கள்?'

'நாங்களே எங்கள் வாழ்க்கையை நிர்ணயம் செய்து கொள்வதாயின் ஒரு முடிவுக்கு வரலாம்.'

'அதைத்தான் நான் சொல்கின்றேன் வாசு.'

'ராதா! எங்களுக்கும்பெற்ருேர்கள் இருக்கின்ருர்கள். அவர்களின் அனுமதியின்றி நாம் காதலிக்கலாம் ஆனல் கல்யாணம் செய்ய முடியாது.'

'உண்மைதான். அப்படி அனுமதி கிடைத்தால் எனக்கும் ஆட்சேபணையில்லை ராதா.'

'ஒ——மை ஸ்விட்.' என்று அவன் மடிமீது மீண்டும் விழுந்தாள் ராதாலட்சுமி.

அவள் உள்ளமெல்லாம் இன்பநாதம் ஒலித்துக் கொண்டிருந்தது. கனவிலும் நினைவிலும் மட்டுமே அனுபவித்த இனிமையான உணர்வுகள் அவளுடைய உடல் நரம்புகளினூடே மின் அணுக்களாக ஊர்ந்து துடித்தன.

'வாசு! வாசு! இக்கணமே என் உயிர் பிரிந்து விட்டால் கூட நான் மகிழ்ச்சியடைவேன்.' என்று மகிழ்ச்சியோடு கூறினுள் ராதா.

'பைத்தியக்காரி! மனிதனுடைய சில ஆசைகளில் ஒன்ருன ஆரம்ப நிலையையே அனுபவிக்காமல் செத்து விடுகின்றேன் என்கிருயே அப்படி என்ன தான் பெற்று விட்டாய்?' என்ருன் ஏளனமாக.

'என்ன வாசு! உங்கள் மடி மீது கிடக்கும் இந்தப் பாக்கியம் கிடைக்குமா?'

'அதுதான் கிடைத்துவிட்டதே.'

'அப்புறம் எதை இரு ஆசைகளில்——என்றீர்களே அதென்ன வாசு?'

'மனிதன் எதை இன்பம் என்றும் சொர்க்கம் என்றும் நினைக்கின்ருனே அதற்கு என்ன கூறுகின்ருர்கள் தெரியுமா?'

'தெரியாதே வாசு.'

'சிற்றின்பம்.'

'வாசு' என்று ஆச்சரியமுற்று எழுந்த பொழுது வெளியே யாரோ கதைக்கும் குரல் கேட்டது. அந்தக் குரல் ராதாலட்சுமிக்குப் பழக்கப்பட்டதாக இருக்கவே அவள் திடீரென மின் விளக்கின் சுவிட்சைத் தட்டி விட்டு வெளியே வந்தாள்.



### முஸ்லிம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தனையும் தவிடு பொடியாகிவிட்டதே! நாம் சரியான படியல்லவா ஏமாந்து போய்விட்டோம்!'" என்றெல்லாம் அதிகாரவர்க்கம் வெட்கித் தலைகுனிந்திட வேண்டும். எமது ஒருமித்த போராட்டத்தைத் தாக்குப் பிடிக்க முடியாது அந்த ஆளும்வர்க்கம் எம்முன்னே மண்டியிட வேண்டும்!

ஆம் தம்பி நாம் இங்கு நடத்தப்போகும் விடுதலைப் போராட்டம் ஒரு வீர வரலாறுக அமையட்டும்! அதிலே வெற்றி நமதேயாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தாபல் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.


## 2 வது ஜனத்திரள் வாரம்!

# சென்ட்ரல் ராணி (யாழ்நகர்)

தமிழ் நாட்டில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது

**முத்துராமன், ஜி. வரலெட்சுமி,**

பிரமிளா, ரங்கராவ், ராகவன், ஓ. ஏ. கே. தேவர், ரி. ஆர். ராமச்சந்திரன், ஆர். வரலெட்சுமி

—நடித்த— கே. எஸ். கோபால கிருஷ்ணனின்

# வாழையடி வாழை



தமிழ் நாட்டில் வெள்ளி விழா கொண்டாடி

ஈழத்திலும் வெற்றிமுரசு கொட்டுகிறது!

## 131-வது தினம்

# கெப்பிட்டல் வெலிங்டன்

(கொழும்பு) (யாழ்ப்பாணம்)

**சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ.**

—நடித்த—



# வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

## 2வது வாரம் காட்சியளிக்கிறது

**கெயிட்டி மற்றும் இரு திரைகளில்**




ஜெமினி

முத்துராமன்

புது முகங்கள் சந்திரமோகன் ஜெயா நிர்மலா

தேங்காய் சீனிவாசன்.

மனோரமா

எம். ஆர். ஆர். வாசு

அன்பு வந்தது
அனுபவம் தானே வரவேண்டும்
முத்துமணிக் கண்ணனுக்கு
பாடல்கள் உங்கள் உள்ளத்தில்
சுடர்விட இன்றே பாருங்கள்

## 2வது மாதம்!!

# செல்லமகால்

**சிவாஜி நாகேஷ்**

**முத்துராமன்**

நடித்த

# 3 தெய்வங்கள்

(வண்ணக் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1973ம் வருடம் மே மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.